ஒன்று இருந்தது. அதன் முனையில் ஒரு திரிசூல வடிவம் செதுக்கப்பட்டு கீழே எழுத்தாணிக்காரன் என்னும் எழுத்து களும் பொறிக்கப்பட்டிருந்தன.

''அந்த கல்லைப் பிடுங்கிப் போட்டுட்டு அந்த பாகத் துலயே ஒரு பத்துக்கு பத்து அளவுல கழிப்பறையை கட்டி டுங்க....'' என்றார் நடராஜன். சித்தாள் ஒருவனும் அதற்காக அந்த கல்லின் மேல் கை வைத்து அதை ஆட்ட முற்பட்டான்.

★

அந்த நான்கு வழிச்சாலை பார்ப்பதற்கு வெளிநாடு களை ஞாபகப்படுத்தியது. விசாலபுரத்தின் குறுக்கில் புகுந்து அந்த நான்கு வழிச்சாலை சென்றது. அதன் நடுவில் அரளிச் செடிகளை வளர்த்துவிட்டிருந்ததில் அவை கலீரென்று பூத்துக்கிடந்தன.

ஊரில் உள்ள வயதான பெருசுகளில் சிலர் சாலை ஓரமாக நின்றுகொண்டு சாலையின் அழகையும் அதன் மேல் சர்ர்.... சர்ர்.... என்று விரையும் வாகனங்களையும் ரசித்தபடி இருந்தனர்.

இந்த செல்போன் யுகத்திலும் மூக்குப் பொடிக்கு இன்னமும் மௌஸ் இருக்கத்தான் செய்தது. அழகப்பன் செட்டியார் சோறில்லாமல்கூட இருந்துவிடுவார். பொடி இல்லாமல் இருக்க மாட்டார். சர்ரென்று மூக்கில் பொடியை ஏற்றும்போது உடம்பில் மின்சாரம் பாய்கிற மாதிரி இருக்கும். சுவாசிக்கத்தான் கடவுள் மூக்கைப் படைத்தான். அதில் பொடியைப் போடும் பழக்கத்தை கண்டுபிடித்து இரண்டு விதமாக மூக்கைப் பயன்படுத்திக் கொண்டது மனிதனின் புத்திசாலித்தனம். எப்பொழுதுமே மனித புத்தி குறுக்கு வழிகளில் திறம்பட வேலை செய்யும்.



அழகப்பன் செட்டியாருக்கு எழுபது வயதாகிறது. வயதாகிவிட்டாலே பொழுதுபோக்குவதில் சிரமங்கள் வந்துவிடுகின்றன. என்னவோ தெரியவில்லை. டி.வி. பார்க்க அவருக்குப் பிடிக்கவில்லை. ரேடியோவில் பாட்டு கேட்பதிலும் அதற்கான ரசனை இல்லை. அரட்டை என்றால் கொள்ளைப் பிரியம். அதில் ஊர்வம்பு நிறைய இருக்க வேண்டியதும் அவசியம்.

பொடி போட்ட சுறுசுறுப்போடு அரட்டைக்கு யாராவது அகப்படுகின்றார்களா என்று அவர் காத்திருந்த போது எதிரில் வந்தார் ஆவன்னா ஊவன்னா லட்சுமணன்.

''எவ்வளவு நேரமாய்யா உனக்காக காத்திருக்கிறது'' - என்று அவரிடம் சண்டைப்போட்டு பேச்சை எடுத்தார் அழகப்பன். இருவரும் போய் நாற்கரச் சாலையோரமாக தப்பிப் பிழைத்து விட்டிருந்த அரச மரத்தின் கீழ் உள்ள திண்ணை மேல் போய் அமர்ந்து கொண்டனர்.

அந்த சிமிண்ட்டு திண்ணையும் ஜிலுஜிலுவென்று இருந்து ஆசனவாய் பரப்பில் ஒரு கூச்சத்தை உருவாக் கியது.

''ரோடு போடறவங்ககிட்ட இருந்து இந்த மரமும் திண்ணையும் எப்படியோ தப்பிச்சிக்கிச்சு... இல்ல லட்சு மணா?''

''ஆமா அழகப்பா... ஆனா, இதையும் வெட்ட வந்தாங்க. அதுக்காக மண்வெட்டியையும் அரிவாளை யும் எடுத்தப்பல்லாம் கால்லயும் கைலயும் அடிபட்டு ரத்தம் பெருகவும் பயமா போச்சு. அத்தோட அந்த காலத் துல காசிக்கு போகைல நம்ம முனியப்ப சேர்வை நட்ட மரம் இது! அப்புறமா ஒரு சர்ப்பம் ஒண்ணு வந்து இந்த மரத்துக்குள்ள பூந்துக்கிச்சு. அதுல இருந்து இதை முனுசாமி

"உனக்கு கிறுக்கு பிடிச்சுப் போச்சு, அதான் உள
ஆரம்பிச்சுட்டே..."

"உன்னைப்போல ஆட்கள் இருக்கவும்தான் கான்ட்
ராக்ட் எடுத்தவன் இஷ்டத்துக்கும் வசூல் பண்ணி கொள்ளை
அடிக்கிறான். கார் வெச்சிருக்கறவன்லாம் பாவிங்க...
பெட்ரோல் விலை ஒரு பக்கம் போட்டுத் தாளிச்சா, இவங்க
ஒரு பக்கம்..."

- அழகப்பன் செட்டியாரிடம் இந்த மாதிரி சமூக
கோபங்கள் நிறையவே வெளிப்படும். அதில் நிறைய
நியாயங்களும் இருக்கும். அதற்கு ஈடு கொடுக்க முடி
யாமல் லட்சுமணன் திணறியபோதுதான் அந்த படகு
கார் அவர்களை ஒட்டி வந்து நின்றது. அதன் கதவின்
கண்ணாடிகள் இறங்கிக் கொள்ள, உள்ளே பருத்து கொழுத்த
நிலையில் கூலிங்கிளாஸ் அணிந்த ஒரு முகம், உதட்டில்
சிகரெட் வேறு...

அழகப்பனும், லட்சுமணனும் கூர்மையாகப் பார்த்
தனர். அவரும் புகையைக் கக்கியபடியே...

"இதுதானே விசாலபுரம்?"

"ஆமாம்..."

"இங்க சீனிவாசன்கறவர் வீடு எங்க இருக்குன்னு
சொல்ல முடியுமா?"

"சீனிவாசன்னா எந்த சீனிவாசனை கேக்கறீங்க? இந்த
ஊர்ல ஏழு சீனிவாசனுங்க இருக்காங்க..."

"இவர் திருப்பத்தூர் பக்கம் காலேஜ்ல புரொபசரா
இருக்காரு..."

"ஓ... நம்ம படிப்பாளி சீனுவா..." லட்சுமணன்
உடனேயே மடக்கிப் பிடித்தார்.



"படிப்பாளி சீனு இல்லங்க... புரொபசர் சீனிவாசன்.."

"அட, என்ன சார் நீங்க... சீனிவாசனை சீனுன்னு கூப்பிடறதுதானே சார் உலக வழக்கம்... அதை வெச்சு சொன்னேன். எங்க ஊர்லயே அதிகம் படிச்சவர் அவரு தான். அதனாலதான் படிப்பாளி சீனுவான்னு கேட்டேன்..."

"சரி... அவர் வீட்ட கொஞ்சம் காட்ட முடியுமா?"

"தாராளமா... நான் நேர்லயோ வந்து காட்டறேன். கார்ல ஏறிக்கட்டுமா?"

- லட்சுமணன் கேட்டபடியே மிக உரிமையாக பின்கதவை திறந்த கொண்டு காரில் ஏறி அமர்ந்து கொண் டார்.

"எவன் காரை எடுத்துக்கிட்டு வருவான் ஓசி சவாரி பண்ணலாம்னே கிடக்கறான்..." என்று அழகப்பன் முணு முணுத்துக் கொள்ள, அந்த காரும் சீறிக் கொண்டு புறப் பட்டது.

அழகப்பனும் பின்பக்கமாய் தெரிந்த காரை வெறித்த போது அதில் வாரித் தெளித்தது போல ரத்தக்கறை!

## 2

ஆகஸ்ட் 31- 1948.

'அந்தக் கல்லை அசைப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. அந்த கொத்தனாரோடு மேஸ்திரியும் சேர்ந்து கொண்டு அதை ஆட்டி அசைத்தே பிடுங்க முற்பட்டார்.

அதன் பிறகே அது மெல்ல அசைந்து கொடுத்தது.

"ஆமா... இங்க இந்த கல்லு எதுக்கு இருக்குது?" கொத்தனார் அதை பிடுங்கிப் போட முனைந்தபடி கேட்டார்.

''யாருக்கு தெரியும்... இந்த வீட்டை நான் வாங்கு நாளா இருக்குது. ஈசானக்கல்லுன்னு சொன்னாங்க. நா இருந்துட்டுப் போகட்டும்னு விட்டுவிட்டேன்...'' என்றா நடராஜன்.

''கல்லுல சூலக்குறியும் எழுத்தாணிக்காரன்னு பேரு இருக்குது. இந்த ஊர்ல ஒரு காலத்துல எழுத் தாணிக்கார கன்னு ஒரு கூட்டம் இருந்ததா சொல்வாங்க...''

''அப்படின்னா யாரு அது?''

''எழுத்தாணிக்காரங்கன்னா தெரியாதா சாமி உங் ளுக்கு... அந்தக் காலத்துல நாலு எழுத்துப் படிக்கவு எழுதவும் தெரிஞ்சவங்களத்தான் எழுத்தாணிக்காரங்கன் சொல்லுவாங்க. இப்ப மாதிரி அப்ப ஏது பேப்பரு பேனா லாம்? பனை ஏட்டுல குத்துக் கம்பியைப் பிடிச்சுக்கிட்டு எதையும் எழுதணும். இல்லாட்டி உளியால இப்படி செது கணும். அப்படி எழுதறவங்களத் தான் எழுத்தாணிக்காரங்கன் வாங்க...''

– பேசிக்கொண்டே அந்த கல்லை இருவருமாக தூக்கி ஒரு பக்கமாய் போட்டு அது இருந்த குழிப்பாகத்தையும் பார்த் தனர். கீழே அடியில் படுக்கை வாட்டில் மண்ணுக்கு பதிலாக ஒரு பட்டியக்கல் தெரிந்தது. அந்த இடத்தில் ஒரு கல் கிடக்க வேண்டிய அவசியமே இல்லை!

கொத்தனார் மற்றும் மேஸ்திரி முகத்தில் மெல்ல ஒரு திகைப்பு பரவ ஆரம்பித்தது!

★

ரத்தக் கறையைப் பார்த்த அழகப்பன் செட்டியாருக்கு சற்று பகீரென்றது.



'வர்ற வழியில் யார் மேல காரை விட்டான்னு தெரியலியே பின் பாகத்துல ஒரே ரத்தமால்ல இருக்கு' என்று முணுமுணுத்துக் கொள்ளவும், அவரை ஒட்டி சரசரவென எட்டடி நீளத்துக்கு ஒரு சர்ப்பம் செல்லவும் சரியாக இருந்தது. அதைப் பார்த்த நொடி அழகப்பன் முதுகுத்தண்டில் ஒரு குறுகுறுப்பு. அந்த சர்ப்பமும் விறுவிறுவென்று அந்த மரத்தின் பொந்துக்குள் புகுந்து மறைந்தும் போனது. அழகப்பனுக்கு தொண்டை வறண்டுவிட்டது.

'லட்சுமணன் சொன்னது நிஜம்தான் போல.... ஆத்தாடி எவ்வளவு பெரிய பாம்பு...' என்று முனகியவராக, அதற்கு மேல் அங்கு நிற்க தைரியமில்லாதவராக தன் வீடு நோக்கி செல்லத் தொடங்கினார்.

புரொபசர் சீனுவாசன் வீடு!

அந்த நாளைய வீடுதான்...

வீட்டு வாசலில் பெரிய ஒதிய மரம். அதன் கிளை எங்கும் வசந்த காலத்தில் பூக்கும் செக்கச் சிவந்த பூக்கள், தரை எங்கும் கொட்டிக் கிடந்த அந்த பூக்களின் மேல் அந்த படகு கார் தேங்கி நிற்கவும் உள்ளிருந்து அந்த கன்னங்கரிய குண்டு மனிதர் இறங்கினார். அப்படியே லட்சுமணனும் இறங்கி வீட்டை காண்பித்தார்.

''இதாங்க நம்ம சீனு வீடு...''

''அந்தக் காலத்து வீடு போல இருக்குதே....''

''ஆமாங்க.... இந்த ஊர்ல எல்லா வீடுகளுமே பழைய வீடுங்கதான். நகரத்தார் வீடுங்கன்னாலே சும்மா கிண்ணுன்னுல்ல இருக்கும். இன்னிக்கெல்லாம் இப்படி கட்ட முடியுமா?''

– லட்சுமணனிடம் பெருமை வழிய ஆரம்பித்தது. அந்த கரிய மனிதரும் கூலிங்கிளாஸை கழற்றி பாக்கெட்டில்

போட்டவராக லட்சுமணனைப் பார்த்து, ''வீட்ட காட்டுனதுக்கு ரொம்ப நன்றிங்க'' என்றார். அதுவே அப்படியே நீங்கள் கழண்டு கொள்ளுங்கள் என்பது போல் இருந்தது.

லட்சுமணன் அதை கண்டுகொள்ளாதவராக, ''என்ன விஷயமாக வந்திருக்கீங்கன்னு சொல்லவே இல்லையே...'' என்று கேட்கவும், அவரிடம் ஒரு மெல்லிய முறைப்பு. அதற்குள் வீட்டு வாசலில் கார் வந்து நிற்பது தெரிந்து சீனிவாசனே வெளியில் வந்து பார்த்தார். அவரைப் பார்க்கவும், கரிய மனிதரிடம் ஒரு புன்சிரிப்பு.

''வணக்கம் புரொபசர்...''

''ஓ.... நீங்களா?''

''நானேதான்... என்னை நீங்க எதிர்ப்பார்க்கலியோ?''

''ஆமாம்... நான்தான் அப்பவே முடியாதுன்னு சொல்லிட்டேனே....''

''அட, என்ன புரொபசர் சார், பேசுனதையே பேசிகிட்டு... போகட்டும். உள்ற வான்னு கூப்பிட மாட்டீங்களா?''

''உள்ற வாங்க...''

அரை மனதாக சீனுவாசன் அழைப்பதையும் கார்காரரும் வெளியே பேச விருப்பமில்லாமல் உள்ளே செல்வதையும் பார்த்த லட்சுமணனிடம் முகத்தில் பூச்சி பறக்கத் தொடங்கியது. ஏதோ அந்த மட்டில் காரில் வர நேர்ந்ததை எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டே திரும்பவும், எதிரில் அழகப்பன் வந்து கொண்டிருந்தார். அவருக்கு லட்சுமணனை பார்க்கவும் ஒரு கோபம்.

''என்ன அழகப்பா, உன்னை விட்டுட்டு கார்ல ஏறி வந்துட்டேன்னு கோவமா?''



''வராதா பின்ன... நீ எல்லாம் என்ன சிநேகிதன்? ஒரு கார்காரன் வந்து வழிய கேட்டா வாயால சொல்ல வேண்டியதுதானே... அது என்ன சின்ன புள்ள மாதிரி ஏறி உக்கார்ந்துக்கறது... உன்னை நினைச்சா எனக்கு எரிச்சலாத் தான்யா வருது. நமக்குன்னு ஒரு கௌரவம் வேண்டாம்?''

அழகப்பன் செட்டியார் லட்சுமணனை போட்டு வாங்கத் தொடங்கிவிட்டார். அப்போது அவரது புலம்பலை மீறிக் கொண்டு புரொபசர் வீட்டுக்குள் இருந்து பலமான குரலில் சீனிவாசன் பேசுவது காதில் விழுந்தது.

'தயவுசெய்து புறப்படுங்க சார்... அந்த இடத்தை நான் இப்ப விக்கறதா இல்லை. அதுல நானே காம்ப்ளெக்ஸ் கட்டடம் கட்டி வாடகைக்கு விடற எண்ணத்துல இருக்கேன்'' என்னும் அவர் குரலே அவர்கள் இருவருக்கும் விஷயத்தை உணர்த்திவிட்டது! பார்த்தபடியே நின்றனர். அந்த கரிய மனிதர் ஏமாற்றமுடன் திரும்பி வந்தார். சீனிவாசன் திரும்பிச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார். தாழிடும் சப்தமும் கேட்டது.

அந்த கரிய மனிதரை அழகப்பனும், லட்சுமணனும் சற்று நெருங்கி வந்து ஏறிட்டனர். அவரும் அவர்களை ஒரு மாதிரி பார்த்தார்.

''வந்தது இடம் வாங்கறதுக்கா?'' மெல்ல ஆரம்பித்தார் லட்சுமணன். அவரிடம் ஆமோதிப்பு.

''நம்ம சீனிவாசன் வீட்டு இடம்தான் வேணுமா?''

''ஆமாம்... அந்த மூணு ஏக்கராதான் வேணும்...''

''ஆமாங்க... ஆசைப்படறீங்க?''

'அந்த நிலத்தையா வாங்க ஆசைப்படறீங்க?''

''ஆமாங்க.... ஆனா, சீனிவாசன் ஒரேயடியா முடியாதுன்னுட்டார்.''

''அதுக்காக சந்தோஷப்படுங்க....''

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"அது சீனிவாசன் சாரோட பரம்பரைச் சொத்து. அவங்க வீட்டுல யார் இறந்தாலும் அந்த நிலத்துலதான் புதைப்பாங்க... அங்க போய் பார்த்திருக்கீங்களா?"

"பார்த்ததில்லை... ஆனா, சார்கிட்ட இடம் இருக்குன்னு தெரிஞ்சுதான் விலைக்கு கேட்டு வந்தேன். ஆமா, இங்க ஒரு செண்ட் என்ன விலை போகுது?"

"அதை எதுக்கு கேக்கறீங்க?"

"அந்த மூணு ஏக்கருக்கு நான் ஒரு கோடி ரூபா தரேன்னேன். நீங்களே சொல்லுங்க... நல்ல ரேட்டுதானே?"

"என்னது... மூணு ஏக்கர் கட்டாந்தரைக்கு ஒரு கோடியா? ஈஸ்வரா.... ஈஸ்வரா... இங்க ரொம்ப அதிகபட்ச விலையே ஏக்கர் பத்து லட்சம்தான். மூணு ஏக்கருக்கு முப்பது லட்சம். அதுலயும் அந்த இடம் பிணங்களைப் புதைச்ச இடம். பிணம் புதைச்ச இடத்துக்கு பத்து லட்சம்கறதெல்லாம் அநியாய விலை." அழகப்பன் செட்டியார் வாயில் அடித்துக் கொண்டார்.

"தா பாருங்க... நாங்க வேற நல்ல இடத்தையே முடிச்சுவிடறோம், அதுவும் இதுல பாதி விலைக்கு. எங்களுக்கு அஞ்சு பர்சண்ட் கமிஷன் மட்டும் தாங்க போதும்...." என்று லட்சுமணன் அப்போதே வியாபாரம் பேசத் தொடங்கி விட்டார்.

ஆனால், அந்த மனிதரிடம் ஆழமான மௌனம்.

"என்னங்க பேச மாட்டேங்கறீங்க."

"இல்ல... இந்த அஞ்சு பர்சண்ட் கமிஷனை நான் இந்த சீனிவாசன் நில விஷயத்துக்கே தரேன். இவர்கிட்ட எனக்காக பேசி உங்களால சம்மதிக்க வைக்க முடியுமா?"



"அட, என்னங்க நீங்க. அது விளங்காத இடம்க. கிட்டத்தட்ட சுடுகாடு மாதிரி. அதுக்குப் போய் இப்படி ஆசைப்படறீங்களே."

"சரி, விடுங்க... நான் வேற ஆளைப் பார்க்கறேன். ஆமா, இந்த ஊர்ல அருணாசல சாமியார்னு ஒருத்தர் இருக்காருல்ல..."

"இருக்காரு... அவரை உங்களுக்கு தெரியுமா?"

"நல்லா தெரியும்.. சென்னைக்குப் பக்கத்துல இருக்கற பம்மல்ல தொழில் பண்ற பாண்டித்துரைன்னா தெரியாத சாமியாருங்க கிடையாது..."

"அப்ப சாமியாருங்களையும் தேடிப் போவீங்களோ?"

"ஆமாம்... நான் பரம சிவபக்தன். சாமியாருங்கன்னாலும் ரொம்ப இஷ்டம். இங்க நான் இந்த மூணு ஏக்கர் இடம் வாங்க ஆசைப்படறதுகூட சாமி சொல்லிதான்..."

"நான் தெரியாமதான் கேக்கேன். அந்த சாமியாருக்கு புத்திகித்தி கெட்டுப் போச்சா... ஒரு சுடுகாட்டை போய் உங்களை வாங்கச் சொல்றாரே..."

"சென்னைல இந்த மாதிரி சுடுகாட்டை வாங்கினவங்கதான் இன்னிக்கு கோடீஸ்வரங்களா இருக்காங்க. இடத்தை சுத்தம் பண்ணி குழி தோண்டி எலும்புகளையும் அப்புறப்படுத்திட்டு அப்புறம் வாஸ்து தோஷம் கழியறதுக்காக ஒரு யாகம் பண்ணிட்டா முடிஞ்சிச்சு..."

"அது சரிங்க... அதுக்கு எதுக்கு இவ்வளவு விலை கொடுக்கணும்?"

அழகப்ப செட்டியார் பாயிண்ட்டை பிடித்தார். ஆனால், அந்த மனிதர் அதற்கு மட்டும் பதில் கூறவில்லை. அவர்களிடம் அதற்கு மேல் எதுவும் பேச விரும்பாமல் தன் காரில் ஏறிக் கொண்டு சாமியாரைப் பார்ப்பதற்கு புறப்பட்டுவிட்டார்!

# 3

ஆகஸ்ட் 31- 1947.

கல்லை அகற்றிய இடத்துக்கு கீழே தெரிந்த சதுரமான பட்டியக்கல் கொத்தனாரை ஆச்சரியப்படுத்தியது.

"ஐயா... இங்கு ஒரு கல் கிடக்குதுங்க... அதை அகத்தாம குழியைத் தோண்டி கடக்கால் (அஸ்திவாரம்) போட முடியாது" என்றார் கொத்தனார்.

"எங்கே, எங்கே?" என்று எட்டிப் பார்த்த மேஸ்திரி முகத்திலும் ஆச்சரியம் ரேகையாக விழுந்து ஓடியது.

"என்ன மேஸ்திரி... ஏன் அது ஒரு பாறையா இருக்க கூடாது?" என்று கேட்டார் நடராஜன்.

"பார்ப்போம்... நல்லா நாலு பக்கமும் மண்ணை விலக்கிட்டுப் பார்ப்போம்" என்ற கொத்தனாரும் தொடர்ந்து நாலா பக்கமும் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தத் தொடங்கினார்.

கிட்டத்தட்ட இரண்டு மீட்டர் நீள அகலத்துக்கு மண்ணை அகற்றிவிட்டு பார்த்தபோது அந்த கல்லின் நடுவில் அதை கையாலோ, இல்லை கயிறு கட்டியோ தூக்குவதற்கு தோதாக கைப்பிடி வெட்டப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த உடனேயே மேஸ்திரிக்கு புரிந்து விட்டது.

"ஐயா.. இந்த கல்லுக்கு கீழ 'அத்துவான அறை' இருக்குதுங்க. இந்த வீட்டுக்கு இது ஈசான்ய பாகம். ஈசான்யத்துல அத்துவான அறை இருந்தா அதுக்குள்ள



வணங்கப்பட வேண்டிய விஷயம் இருக்குதுன்னு அர்த்தங்க...' என்றார்.

"வணங்கப்பட வேண்டியதுன்னா, சாமியா?"

"தெரியாது. திறந்து பார்த்தா தெரியும். பாருங்க கல்லுலியே கைப்பிடி இருக்குது. இதுல ஒரு கயித்தை கட்டி நாலு பேரா சேர்ந்து இழுத்தோம்னா கல்லு மேல வரும். அப்ப உள்ளார என்ன இருக்குன்னு தெரிஞ்சிடும்.." என்றவர், கயிற்றுக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.

நடராஜன் செட்டியாருக்கு வியர்க்க ஆரம்பித்து விட்டது.

உள்ளே ஏட்டிக்கு போட்டியாக ஏதாவது இருந்தால் என்னாவது என்கிற பயம் வந்து ஒட்டிக் கொண்டது.

ஒரு கழிவறை கட்டுவதற்கு ஆசைப்பட்ட விஷயம் திசை மாறி வேறுவிதமாய் செல்கிற மாதிரி எல்லாம் தோன்றியது. விசாலாட்சியும் வந்து நின்று புடவை முந்தானையால் வாயை மூடியபடி ஆர்வமாகக் கவனிக்கத் தொடங்கினாள்.

கயிறும் வந்தது.

கைப்பிடிக்குள் புகுந்து முடிச்சுப் போட்டு மேலே ஒரு மூங்கிலை நீட்டிப் பிடித்து அதில் கயிற்றை மடக்கிக் கட்டி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாய் இரண்டு பேர் தங்களின் தோளில் மூங்கிலை வைத்து தம் கட்டி தூக்க முற்பட்டனர்.

பலப்பல வருடங்களாய் அமுங்கிக் கிடந்த கல் அசைய மறுத்தது.

மூச்சுத் திணறியது.

வியர்த்து வடிந்தது.

இறுதியாக ஒரு வழியாக அசைந்து கொடுத்த கல்லை விலக்கிவிட்டு உள்ளே தெரிந்த அத்துவான அறையைப் பார்த்தபோது...

★

டொக்... டொக்..!

கதவு தட்டப்படவே திறந்தார் சீனிவாசன்.

எதிரில் லட்சுமணன்!

''வாங்க மாமா...'' வரவேற்றார் சீனிவாசன்.

''யாருவே அது அந்த கருவாயன்... உம்ம சுடுகாட்டு இடத்தைக் கேட்டு வந்தான் போல தெரியுது?'' லட்சுமணன் எடுப்பிலேயே விஷயத்தை தொட்டுவிட்டார். அப்படியே உள் நுழைந்து ஹாலில் கிடந்த நாற்காலியிலும் அவர் பாணியில் ஒரு கால் மேலும் ஒரு கால் கீழுமாக உட்கார்ந்து கொண்டார்.

லட்சுமணன் கொஞ்சம் வம்பு பிடித்த மனிதர்.

ஊரில் உள்ள எல்லார் வீட்டு விஷயமும் ஓரளவுக்குத் தெரியும். அதனால் அவர் என்றால் ஒரு மெல்லிய பயம். அது சீனிவாசன் முகத்திலும் தெரிந்தது.

''என்ன சீனி... நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலியே...''

''என்னத்த மாமா சொல்ல... உசுரைக்கூட விட்டுடுங்க... அந்த இடத்தை மட்டும் யாருக்கும் விக்காதீங்கன்னு எங்க அப்பச்சியும் அப்பத்தாவும் சொல்லிட்டு செத்தது தான் காரணம். இதை எல்லாம் நான் அந்த ஆள்கிட்ட விலாவரியா சொல்லிக்கிட்டிருக்க பிரியப்படலை. அதான் இஷ்டமில்லை கிளம்புங்கன்னுட்டேன்.''



''அப்பச்சிக்கும் அப்பத்தாவுக்கும் நீ இப்படியா கட்டுப்படுவே. அந்த ஆள்தான் கோடி ரூவா வரைலயும் தரேங்கறான்ல....''

''நீங்க வாயைப் பிடுங்காதீங்க.... உங்க வயசுக்கு மரியாதை கொடுத்து எது காரணமோ அதை சொல்லிட்டேன். அதுக்கு மேல போட்டு நோண்டக் கூடாது...''

சீனிவாசன் முகம் கணத்தில் மாறி விட்டது.

லட்சுமணனும் முறைத்தபடியே விலகிப் போனார். வாசல் தாண்டியவர் திரும்பவும் வந்தார்.

''அந்தாள் நம்ம சாமியை பார்க்கப் போயிருக்கான். சாமி கூப்பிட்டு வித்துடுன்னு சொன்னா என்ன பண்ணுவே?''

''நான் கும்புடற அந்த குன்னக்குடி முருகனே வந்து சொன்னாலும் கேக்க மாட்டேன். ஏன்னா, அதைவிட பெருசு எங்க வீட்டுப் பெரியவங்க சொன்ன வார்த்தை...'' லட்சுமணனுக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது. அந்த நொடியே சீனிவாசன் வீட்டு லேண்ட் லைன் போனில் அமட்டல்.

போய் காதை கொடுத்தார்.

''ஆசீர்வாதம் **சீனு**! நான் சாமி பேசறேன். சிவபெருமான் கடாட்சத்தால எல்லாம் நல்லபடியா நடக்கட்டும். ஆமா, இப்ப நமக்கு வேண்டப்பட்ட தொண்டிமுத்துங்கறவர் இட விஷயமா உன்னை வந்து பார்த்தாராம். நீ மறுத்திட்டியாமே?''

- எடுப்பிலேயே சாமி விஷயத்தைதான் தொட்டார்.

''ஆமாம் சாமி.. இப்பதான் லட்சுமணன் மாமாகூட அந்த இடத்தை வித்தாதான் என்ன இப்போன்னு கேட்டார். நான் கும்புடற முருகனே வந்து சொன்னாலும் எங்க பெரியவங்க ஆசைப்படி அதை அப்படியேதான் வெச்சிருக்கப்

போறேன்னு சொல்லிக்கிட்டிருந்தேன். உங்களுக்கும் அதே பதிலை திரும்ப ஒரு தடவை சொல்லத் தேவையிருக்கு துன்னு நினைக்கிறேன்'' என்று சாமிக்கும் சரியான விதத் தில் பதிலைச் சொல்லி முடித்தார். மறுபக்கம் அதற்கு மேல் பேசாமல் சாமியும் போனை வைப்பது சப்தத்தில் கேட்டது.

வாசலருகிலேயே நின்று கேட்டபடி இருந்த லட்சு மணனும் பெருமூச்சுடன் வாசல் தாண்டும்போது கூரியர் தபால் ஒன்று...

ஓடிப்போய் கையெழுத்துப் போட்டு வாங்கினார் சீனிவாசன். கடிதத்தை பார்த்த மாத்திரத்தில் அது சென்னை யிலுள்ள அவரது ஒரே மகளான சந்தியாவிடமிருந்து என்பது தெளிவாகிவிட்டது. சீனிவாசன் மனைவி மல்லிகாவும் ஆவலாக நெருங்கி வந்தாள்.

''யாருங்க... சந்தியாதானே?''

''ஆமாம் மல்லிகா...''

''அப்படியே உரத்த குரல்ல படிங்க... நானும் கேட்டுக் கறேன்.''

''உன் மகதான் இன்னும் அந்தக் காலத்துலயே இருக் காள்னா நீயும் அப்படியே இருக்கியே மல்லிகா...'' என்றபடி கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தார்.

'மை டியர் மம்மி டாடி...

அன்பு முத்தங்கள்.

இங்கு என் ட்ரெயினிங் நல்லவிதமாக முடிந்தது. ட்யூட்டியில் சேர ஆர்டர் அடித்துக் கொடுத்துவிட்டார்கள். நடுவில் ஒரு நாள்கூட லீவு கிடையாது.

எனக்கு க்ரியேடிவ் அசிஸ்டெண்ட் போஸ்டிங் போட் டுள்ளனர். எல்லாவித அலவன்ஸுகளுடனும் சேர்த்து



நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வருகிறது. முதல் மாத சம்பளம் வாங்கியவுடன் அப்படியே எடுத்துக் கொண்டு வருகிறேன். நமது குலதெய்வமான குன்னக்குடி முருகனுக்கு அபிஷேகம் செயது உங்கள் விருப்பம் போல் சம்பளப் பணத்தை உண்டியலில் போட்டுவிடலாம்.

இந்த செல்போன் யுகத்தில் இப்படி நான் கடிதம் எழுதக் காரணம் இருக்கிறது. செல்போனில் பேசினால் பேசின அந்த நிமிடங்களோடு என் பேச்சு முடிந்துவிடும். கடிதம் என்றால் அப்படியில்லை. அம்மாவுக்கு என் நினைவு வரும்போதெல்லாம் எடுத்துப் படிக்கலாம். செலவும் கிடை யாது. அத்துடன் கடிதங்கள்தான் எண்ணங்களை அழுத்த மாக பகிர்ந்துகொள்ள சரியானவை. இந்த செல்போன் சுத்த வேஸ்ட். இது தொழில்முறை பேச்சுக்குதான் மிகுந்த பயன்தரக்கூடியது. மற்றபடி இதனால் நிறைய தீமைகளே ஏற்படுகின்றன. என்னோடு வேலைபார்க்கும் ஒரு பெண் மிகவும் பாவம். அவள் ஹாஸ்டலில் குளிக்கும்போது யாரோ திருட்டுத்தனமாக செல்போனில் படம் எடுத்துவிட்டனர். அதைக் காட்டி பணம் புடுங்கவும் முயற்சி செய்தனர். பின்னர் நான்தான் அவளுக்கு தைரியம் தந்து போலீஸில் புகார் கொடுக்கச் செய்து படம் எடுத்த நபரையும் தந்திர மாக பிடிக்க ஏற்பாடு செய்தேன். அவன் ஒரு ஏழு வருஷத் திற்கு வெளியே வர முடியாது. அவன் மேல் அப்படி அழுத் தமாக குற்றத்தை பதிவு செய்துள்ளோம்.

இதைப் படித்துவிட்டு என்னை நினைத்து அநாவசி யமாக கவலைப்படாதீர்கள். நான் ஜாக்கிரதையாகவும் பாதுகாப்பாகவும் தான் இருக்கிறேன் - இருப்பேன்.

நான் உங்கள் பெண்.

என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது.

எனக்கு குன்றக்குடி முருகனின் துணை உள்ளது.

அந்த விபூதி அணியாமல் நான் ஆபீஸ் போவதே கிடையாது. இதனால் ஆபீஸில் என் சக தோழிகள் நண்ப கள் என்னை கேலியாக 'சந்தியா மாதாஜி' என்று கிண்டல கூப்பிடுகிறார்கள். ஆனால், அது எனக்கு மகிழ்ச்சியை தருகின்றது.

அப்பா! நீங்கள் காபியில் சர்க்கரை சேர்த்துக் கொ ளாதீர்கள். அம்மா! நீ தினமும் காலை மடக்கி பயிற்சி செ அப்போதுதான் மூட்டுவலி வராது. இருவரும் ஆசைப்பட்டு மொச்சைப் பயறை சாப்பிட்டு விடாதீர்கள். உங்கள் இருவருக்குமே அது ஆகாது.

அப்பா... இந்த கடிதம் கிடைத்ததற்கு போன் பண்ணவும். போனில் இது தொடர்பாக ஒரு 5 நிமிடம் பேசினால் உண்மையில் அதுதான் ஜாலி.

இப்படிக்கு, பாசத்திற்குரிய உங்கள்
சந்தியா.'

நீண்ட அந்த கடிதத்தைப் படிக்க சீனிவாசனுக்கு மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. சந்தியாவின் தெளிவு அவளது தீர்க்கம் என்று எல்லாமே அவரைப் பரவசப்படுத்தியது. மல்லிகாவின் கண்களிலும் நீர் துளிர்த்துவிட்டிருந்தது.

''என்னங்க... முதல்ல சந்தியாவுக்கு போன் போடுங்க. என் செல்லத்தோட குரலை முதல்ல கேட்கறேன்...'' என்று பரபரப்பாக மாறினாள்.

''இரு, மல்லிகா! கொஞ்சம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கோ. இன்னேரம் சந்தியா நாம லெட்டர் கிடைச்சு படிச்சிகிட்டு இருக்கிறதா நினைச்சுக்கிட்டிருப்பா. அதே எண்ணத்துல நம்ம போனுக்காவும் காத்திருப்பா. ஆனால், நாம



உடனே போன் பண்ணிடக் கூடாது. கொஞ்சம் அவளை தவிக்க விடுவோம்.''

''அட, போங்க நீங்க... அது குழந்தைங்க. அதைப் போய் தவிக்க விட்டுக்கிட்டு... உங்களுக்கு எது எதுல விளையாடறதுன்னு இல்லையா?''

''நம்ம பிள்ளைகிட்ட நாம விளையாடாம யார் விளையாடுவா?''

''கூடாதுங்க... நம்ம பிள்ளையை நாம எதுக்காகவும் தவிக்கவிடக் கூடாது. அது மனசு தாங்காதுங்க...''

''அட.. இதுக்காக நீ ஏன் கண் கலங்கறே. ஒரு விளையாட்டுக்கு சொன்னதுக்கு இவ்வளவு சீரியஸ் ஆயிட்டியே.''

''பின்ன என்னங்க... அவளே நம்மள பிரிஞ்சு தனியா இருக்கா. ஹோட்டல் சாப்பாடு வேற - யார் கையோ - எப்படிப்பட்ட ராசியோ? இத்தோட ஆபீஸ்ல வேலை வேற... அதுக்கு நம்ம நினைப்புதானேங்க சுகமே....''

''அவளுக்கு மட்டுமா.. நமக்கும்தானே?''

''பேசிக்கிட்டே இருக்கீங்களே... எங்க போன்.. முதல்ல போன் போடுங்க...''

- பரபரப்புக்கு மாறி படபடப்பில் உழன்றாள் மல்லிகா.

''ஆனாலும் இந்த பாசம் ரொம்ப பொல்லாதது மல்லிகா. நான் போன் போட்டு தராட்டி ரயிலேறி உன் பொண்ணைப் பார்க்க நேராவே போயிடுவே போல இருக்கே?''

''நிச்சயமா... அப்படிப் போனா என் கையால என் செல்லத்துக்கு ஒரு நாலு நாளைக்கு நல்லா சமைச்சு போடுவேன்ல?''

''பைத்தியகாரி... அதுக்கு நீ இப்பவே ரெடியாகு நானும் உன் கூட வரேன். ரெண்டு பேருமே நம்ம பெ முன்னால போய் நிப்போம்...''

''நிஜமாவா சொல்றீங்க?''

''போனு...''

''அதான் நேர்ல போகப் போறோமே...''

''அதுக்கு எப்படியும் ஆறு ஏழு மணி நேரம் ஆகு அதுவரை நம்மகிட்ட இருந்து போன் வராம நம்ம பொண்ணு தவிப்பாளே.''

''நல்லா தவிக்கட்டும்...''

''சரி.. நாம பண்ணாட்டி என்ன... அவ எப்படியு பண்ணுவா?''

''அதான் கிடையாது. நான் இப்பவே என் செ போனை ஆஃப் பண்ணிடப் போறேன்.''

''அட, என்னங்க நீங்க... திரும்பத் திரும்ப உங் போக்குலயே போகப் பார்க்கறீங்களே...''

''பைத்தியகாரி... நான் பாசத்தை தேக்கறேன், நமக்கு போன் பண்ணி ஸ்விட்ச்சுடு ஆஃப்னு வந்து சந்தி தவிக்கும்போது எதிர்ல போய் நின்னா அதுக்கு எவ்வள சந்தோஷமா இருக்கும்னு யோசிச்சுப் பார்....''

''அதை தவிக்கவிட்டுட்டுதானா போய் நிக்கணும் போன் பண்ணி ரெண்டு பேரும் கிளம்பி வந்துகிட்டிரு கோம்னா, அது எவ்வளவு சந்தோஷப்படும். யோசிச்சு பாருங்க.''

''மல்லிகா! உன் பாசத்துடிப்பு எனக்கு தெரியுது. ஒரு விஷயத்தை மறந்துட்டே எப்பவும் பேசறே. நமக்கும்



வயசாயிடிச்சு. நாம என்ன அதுகூட அதோட காலம் பூராவா இருக்கப் போறோம்?''

''நீங்க என்ன பேசறீங்க ... உங்க பேச்சே எனக்கு புதிரா இருக்குது..'' - மல்லிகா அரண்டு போனாள். ஆனால், சீனிவாசன் சிரித்தபடி தொடர்ந்தார்.

''பைத்தியக்காரி.... சேர்ந்துருக்கற மாதிரியே பிரிஞ்சும் இருக்க தெரியணும், ஒருவேளை நம்ம காலம் முடிஞ்சு நாம போய்ச் சேர்ந்துட்டாலும் நம்ம பொண்ணு திகைச்சுப் போய் நின்னுடக் கூடாது. அவ பாதைல அவ முன்னேறி போய்க்கிட்டே இருக்கணும். அதுக்கு இதெல்லாம் பயிற்சி மாதிரி...''

- சீனிவாசன் தன் முடிவை நியாயப்படுத்தினார்.

மல்லிகாவுக்கு மட்டும் இறுதி வரை சமாதானம் ஆகவில்லை. அவருக்குத் தெரியாதபடி ரகசியமாக சந்தியா வுக்கு போன் செய்ய முயன்று பார்த்தாள். சந்தியா செல் போனை எட்ட முடியவில்லை. 'நாட் ரீச்சபுள்' என்றே வந்தது!

## 4

அந்த அத்துவான அறைக்குள் ஒரு பெண் சிலை ஒன்று படுக்கை வாக்கில் கிடந்தது. பல காலமாக உள்ளடங்கி கிடந்ததால் அதன் மேல் மண் திப்பிகள் ஒட்டிக் கிடந்தன. கல்லை அகற்றிய நொடி வெளிச்சம் பட்டு பளிச்சென்று தெரிந்தது அந்த சிலை. மூன்றடி அகலமும் ஐந்தடி உயரமும் இருந்தது. கோயிலில் அம்பாள் விக்கிரகம் அமர்ந்திருப்பது போலதான் அந்த சிலையும் அமர்ந்து நிலையில் இருந்தது.

ஒரு கையில் மழுவாயுதம்! இன்னொரு கையில் ஒரு சிறு கத்தி வைத்திருந்தது

அப்படியே மல்லாக்கப் படுத்திருக்கும் ஒருவர் வானத்தை பார்த்தபடி படுத்திருப்பது போல அந்த சிலை காட்சி தந்தது.

கொத்தனார், மேஸ்திரி முதல் நடராஜன் செட்டி யாரும், விசாலாட்சியும் அதை பார்த்து வியந்தார்கள்.

“ஐயா.... சாமி சிலைங்க...” என்றார் மேஸ்திரி.

“பார்த்தா அப்படிதான் தெரியுது. ஆனா, எதனால இப்படி உள்ள போட்டு கல்ல போட்டு மூடுனாங்கன்னு தெரியலியே” என்றார் கொத்தனார்.

“இப்ப என்னங்கய்யா பண்ணலாம்?”

“எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியலியே?”

“ஏங்க நாம குன்னக்குடி மலை மேல தங்கியிருக்கற சாமியாரை போய்ப் பார்த்து அவர்கிட்ட விவரம் கேட் போம்?” - விசாலம் எடுத்துக் கொடுத்தாள்.

“இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் சாமியாருங்க தான் சரி. அப்படியே செய்யுங்க! தற்காலிகமாக இந்த இடத்தை ஒரு பலகையைப் போட்டு மூடிவைப்போம். அவர் வந்து பார்த்துட்டு என்ன சொல்றாரோ அப்படியே செய்துடு வோம்...”

- என்று மேஸ்திரியும் தனது வேலையை ஒத்திப்போட் டார். நடராஜனிடம் ஒரு சலனம் தெரியத் தொடங்கியது. அவர்கள் விகைவும் விசாலம் கேட்டாள்.

“ஏங்க.... என்னங்க இதெல்லாம் - நல்லதுக்கா கெட்டதுக்கான்னே தெரியலீங்களே.”

“அதான் விசாலம் எனக்கும் புரியலை. இது கும்புட வேண்டிய சிலையா, இல்லை இப்படி உள்ற கிடக்கிறது தான் சரியான்னு தெரியலியே...”



“சரி, வாங்க... இப்பவே குன்னக்குடிக்கு போவோம்...”

“அதுதான் இப்ப ஒரே வழி....” என்று புறப்படு முன் வீட்டிக் இருந்து பலகைகளை தேடி எடுத்து வந்து தோண்டிய பாகத்தின் மேல் மூடப் பார்த்தார். எவ்வளவு முயன்றும் முழுவதுமாய் மூட முடியவில்லை. அதற்குள் அக்கம் பக்கம் விஷயம் பரவி ஆளாளுக்கு வந்து பார்க்கத் தொடங்கினார்!

★

சீனிவாசனும் மல்லிகாவும் புதிய நாற்கர சாலை யின் ஒரு ஓரத்தில் வெளியூர்ப் பேருந்துகள் வந்து நிற்கும் இடத்தில் நின்றபடி இருந்தனர்.

துப்பாக்கியில் இருந்து தோட்டாவானது வெளிப்பட்டு சீறிக்கொண்டு பாய்வது போல சாலை மேல் வாகனங்கள் சீறியபடி இருந்தன. மல்லிகா முகத்தில் மட்டும் வாட்டம் தெரிந்தது. அது சீனிவாசனுக்கு புரிந்தது.

“மல்லிகா... உன் மககூட பேசறதா இருந்தா தாராளமா பேசு...” என்று பாக்கெட்டில் இருந்த செல் போனை எடுத்துக் கொடுத்தார். மல்லிகாவும் முயற்சி செய்து பார்த்தாள்.

“நாட் ரீச்சபுள்னே வருது...”

“அப்படின்னா டவர் கிடைக்காத ஒரு இடத்துல சந்தியா இருக்கணும்.”

“அது எப்படிங்க அவ்வளவு பெரிய சிடில டவர் கிடைக்காம போகும், இங்க கிராமத்துலயே கிடைக்கும் போது...”

“கோபப்படாதே. சில நேரங்கள்ல டவருக்கு பவர் கட் ஏற்பட்டா இப்படி ஆகும். நம்ம நாட்டுலதான் பவர்கட் இல்லாத ஊரே இல்லையே?”

"...சீனிவாசனின் ...
பதிக்கவில்லை. அவருக்கு ...
கட்டுமே ...
அந்த சமயம் அவர்கள் ...
பஸ்களும் அந்த ...
"என்னங்க இது... ஒரு பஸ்ஸை...
"பஸ்ஸெல்லாம் நாளைக்கு...
கிராமத்துல இருந்தா தேடுடு ...
"நாமளும்தானே வரி கட்டறோம்."
"நாம என்ன... அவங்கள மாதிரி ...
கட்டறோம்? ஏதோ கட்டறோம்..."
"இப்ப நீங்க ஆதரவா பேசறீங்களா... எதிர்ப்பா ...
நீங்களா?"
"நான் நியாயத்தை பேசறேன். உனக்கு எப்படி ...
தூங்க தோணுதோ அப்படி எடுத்துக்கோ. நகர வாழ்க்கை...
சில நன்மைகள், சில தீமைகள். கிராம வாழ்க்கை...
அப்படிதான்..."
"எங்க இப்படி சொக்க போட ஆரம்பிச்சிட்ட...
நல்லவராதானே இருந்தீங்க?"
"என்ன பண்றது... நமக்கு பஸ் கிடைக்கிற வ...
பொழுது போகணுமே?"
- சீனிவாசன் நூலிபாக சொல்லவும், அவர்கள...
அந்த கறுத்த மனிதரின் கார் உரசிக் கொண்டு நிற்கவு...
சரியாக இருந்தது.
கண்ணாடி சர் என்று கீழ் இறங்கியது.
அவர் முகமும் தெரிந்தது.



"...புரியலை...'' என்றார்.
சீனிவாசனுக்கு அவரைப் பார்க்கவும் சரி என்றது.
பார்வையைத் திருப்பிக் கொண்டு சாலையைப்
... "உங்களைதான். எங்க கிளம்பிட்டீங்க?"
கேட்டேன்."
"புரியலை சார்! உங்களுக்கு?"
"அது எதுக்கு உங்களுக்கு?"
"கோபிக்காதீங்க... நான் சென்னைதான் போறேன். சென்னைல எங்க இறங்கணுமோ இறங்கிக்குங்க. ...லாம்."
"ரொம்ப நன்றி! நாங்க பஸ்லயே போய்க்கறோம்."
"என்ன புரியலை சார். என்னை என்னவோ ஜென்ம விரோதிய பார்க்கற மாதிரி பார்க்கறீங்க. நான் ரொம்ப நல்லவன் சார்."
"இப்ப கொஞ்ச வாயை மூடுக்கறீங்களா?"
- சீனிவாசன் கோபத்தில் வெடித்தார். அவரும் அதற்கு மேல் அவரை சீண்டாமல் புறப்பட்டுவிட்டார்.
பின்னாலேயே இன்னொரு கார். பார்க்கும்போதே அது ஒரு டிராவல்ஸ் கார் என்பது பளிச்சென்று தெரிந்தது. காரும் சீனிவாசனை ஒட்டி நின்றது. உள்ளிருந்த டிரைவர் பேசினார்...
"சார்! வாறீங்களா, வண்டி சென்னை வரை போகுது..."
"இல்லப்பா. நாங்க பஸ்லயே போய்க்கறோம்."
"சார்! பஸ் டிக்கெட் எவ்வளவோ அதையே கொடுங்க. சும்மா நான் ஒரு பார்ட்டியை காரைக்குடில இறக்கிட்டு சும்மா போறதுக்கு யாரையாவது கூட்டிக்கிட்டுப் போகலாமேன்னு பார்க்கறேன்."

- டிரைவர் குரலில் தெரிந்த யதார்த்தம் சீனிவாசனை சற்று யோசிக்க வைத்தது. மல்லிகாவுக்கும் பஸ்ஸுக்கு காத்திருப்பது எரிச்சலாக இருந்தது.

''என்னங்க போலாங்க...'' என்றாள்.

''சரிப்பா... ஆனா, ஒரு கண்டிஷன். போற வழில எங்களைத் தவிர யாரையும் ஏத்தக்கூடாது...''

''அப்ப ஒரு நூறு ரூபா சேர்த்து போட்டுக் கொடுங்க சார்...''

''இப்பதான் பஸ் டிக்கெட் காசு கொடுத்தா போதும்னே...''

''பெட்ரோல் விலையைக் கொஞ்சம் யோசிச்சு பாருங்க சார்.''

''இதோ பாருப்பா... அந்த விலை உயர்வு உனக்கு மட்டமில்ல எனக்கும்தான்...''

''சரிங்க சார்... உங்க விருப்பம் போல கொடுங்க... ஏறுங்க.''

-அவன் இறங்கிப் பின்னால டிக்கியைத் திறந்தான் அவர்களின் பெட்டியை அதில் வைக்கச் சொல்லி விட்டு பின் டிக்கியை மூடினான்.

அவர்களும் பின் ஸீட்டில் ஏறிக் கொண்டனர்.

மல்லிகாவுக்கு உற்சாகமாக இருந்தது.

டிரைவர் உள்ளே ஏ.ஸி-யை போட்டுவிட்டு சிடியில் பாட்டையும் போட்டான்.

''டிரைவர்... பாட்டை நிறுத்து. எனக்கு இந்த சினிமா பாட்டுன்னாலே பிடிக்காது'' என்றார்.



''ஏங்க இப்ப ட்ரை பண்ணிப் பாருங்களேன். சந்தியா வோட லைன் கிடைக்குதான்னு...'' என்று மல்லிகா மகள் நினைப்பிலேயே போய் நின்றாள்.

அவரும் முயன்றார். காரிடமும் நல்ல வேகம். லைன் கிடைக்கவில்லை.

அதற்குள் டோல்கேட் வந்துவிட்டது.

எரிச்சலுடன் பணத்தை கொடுத்து ரசீதை வாங்கிக் கொண்டான் டிரைவர். அப்படியே ரசீது கொடுத்த நபரை பார்த்து, ''சரியான கொள்ளக்காரங்கடா நீங்க... ரோடு போட்டு பராமரிக்கறதுங்கறது அரசாங்கத்தோட கடமை. ரோடு போட்டு அதை வெச்சே சம்பாதிக்கறது அரசாங்கம் கிடையாது'' என்றும் கடிந்து கொண்டான். அதை சீனிவாச னும் ரசித்தார்.

''சரியா சொன்னேப்பா... என் ஊருக்கு நான் வரதுக்கு இவங்ககிட்ட தினமும் அனுமதி கேக்க வேண்டியதா இருக்கு. வழியை மறிச்சு உட்கார்ந்துகிட்டு உயிரை எடுக்க றாங்க. நீ சொன்ன மாதிரி இது ஒரு அரசாங்கத்தோட கடமை. கடமைக்கு காசு வாங்குனாகூட பரவாயில்லை. நூத்துக் கணக்குல வரிய போட்டு கொள்ளை அடிக்க றாங்க. இவங்க உண்மைலே எவ்வளவு செலவு செய்து ரோடு போட்டாங்க. அதை ரெகவர் பண்ண இந்த வரிதான் சரியான அளவான்னு எனக்குள்ள எவ்வளவோ கேள்வி கள் இருக்கு. சில டோல்கேட்ல பத்து பதினஞ்சு வருஷ மெல்லாம் வரி வசூலை விடாம நடத்தறாங்க. மக்கள் பொங்கி எழாம இவங்க திருந்த மாட்டாங்க...''

- டிரைவர் சகஜமாக பேசியவராக திரும்பவும் சந்தியா வுக்கு முயன்றார். நல்ல வேளையாக இந்த முறை லைன் கிடைத்தது.

''சந்தியா...''

‘‘அப்பா...’’

‘‘என்னம்மா... உன் லைனே கிடைக்க மாட்டேங்குது.’’

‘‘நான் உள்ள எம்.டி. ரூம்ல இருந்தேன்பா. அங்கு செல் ஒர்க் பண்ணாது. ஜாமர் அங்கு இருக்கு...’’

‘‘அதானே பார்த்தேன்.... பை த பை, உன் லெட்டர் கிடைச்சிச்சு. நல்லா எழுதியிருந்தே.’’

‘‘தேங்க்ஸ்ப்பா... உங்க போனுக்காகத்தான் ரூமை விட்டு வெளிய வந்தேன் உடனே பண்ணிட்டீங்க...’’

‘‘கொஞ்சம் இரு. உங்கம்மா பேசணுமாம்....’’ என்ற சீனிவாசன், போனை மல்லிகாவிடம் தரும்போது, ‘‘நாம கார்ல வந்துகிட்டிருக்கறத சொல்லாம பேசு. சஸ்பென்ஸா போய் நிப்போம்...’’ என்றார் மெல்லிய குரலில். மல்லிகா அதை பொருட்படுத்தாமல் போனை வாங்கி ‘‘சந்தி’’ என்றாள் அவள் பாணியில்.

‘‘அம்மா... அடுத்த மாசம் கட்டாயம் உன்னைச் சந்திக்கறேம்மா’’ என்றாள் கிண்டலாக. களுக்கென்று அதைக் கேட்டு சிரித்துவிட்டாள் மல்லிகா.

‘‘இந்த சிரிப்புக்காகதாம்மா அப்படிப் பேசினேன்...’’

‘‘எப்படிடா இருக்கே?’’

‘‘எனக்கென்னம்மா நல்லா இருக்கேன்... ஆனா, சாப்பாடுதான் படுத்துது. நான் சாப்பிடற மெஸ்ல அண்ணாசாமிங்கற ஒருத்தர்தான் சமையல்காரர். அவருக்கு இந்த உலகத்துலயே ரொம்ப பிடிச்ச காய் பூசணிக்காய் தான். தினம் அதுலதான் சாம்பார். அதே போல பீட்ரூட் பொரியல்தான் தினமும். ஏன்னா, இது ரெண்டும்தான் காய்கறி மார்க்கெட்ல சீப். இதுக்கு பேரே ஹோட்டல் காயாம். வேடிக்கையா இல்லை.’’



‘‘அப்ப உன் நாக்கு செத்துக்கிடக்குன்னு சொல்...’’

‘‘அது செத்து, அதை நான் புதைச்சு பல மாசமாச்சு. இப்ப நான் பேசறது வாடகைக்கு வாங்குன ஒரு நாக்கு மூலமாம்மா...’’ - சளைக்காமல் சந்தியா ஜாலிக்கு ஜாலியாக பேசினாள். மல்லிகாவுக்கு கண்களில் நீர் துளிர்த்துவிட்டது, நாக்கு நுனிக்கு வந்துவிட்டது ‘உன்னைப் பார்க்க நாங்கள் வந்து கொண்டிருகிறோம்’ என்னும் வார்த்தைகள். அதை கவனித்து ஜாடையாலேயே தடுத்தார் சீனிவாசன்.

‘‘அப்புறம்மா... ஊர்ல மழையா?’’

‘‘மழையாவது கிழையாவது... எல்லாரும் சேர்ந்து அழுதாக்கா வேணா கண்ல தண்ணி வந்து அது தரைல கொட்டினா உண்டு.’’

‘‘ஊருணில தண்ணி இருக்குதா- வத்திடிச்சா?’’

‘‘ஏதோ கொஞ்சம் இருக்குது. பவர் கட்தாம்மா ரொம்ப மோசம். வெயிலுக்கு அதுக்கும் உடம்பு அவிஞ்சு போயிடுது...’’

‘‘இங்க எனக்கு ஆபீஸ்ல ஏ.ஸிம்மா. அதனால வெயில் தெரியல. ஆனா, ரூம்ல ரொம்ப மோசம். சென்னையும் சூரிய பகவானுக்கு ரொம்ப புடிச்ச ஊர்தாம்மா. டெய்லி இங்க கதகளியே ஆடறாரு.’’

‘‘பேசாம ஒரு தனி வீடு பார்த்துடேன்.’’

‘‘வாடகை எட்டாயிரத்துல இருந்து பத்தாயிரம் கேப்பாங்க. தோட்டத்துல பாதி கிணறு மாதிரி சம்பளத்துல பாதியை அதுக்குக் கொடுத்துட்டு அப்புறம் என்னம்மா பண்ண?’’

‘‘அதுக்காக இப்படியே எவ்வளவு நாள் கஷ்டப்பட?’’

‘‘நான் என் சம்பாத்தியத்துல சொந்தமா ஒரு வீடு வாங்கறவரை சகிச்சுக்கிட்டுதாம்மா இருந்தாகணும்.’’

''அதுக்கெல்லாம் யோகம் வேணும்மா... நமக்குன்னு இருக்கற இடத்தையே நம்மால பயன்படுத்த முடியலியே...'' -மல்லிகா பேச்சுவாக்கில் நிலத்திடம் வந்தாள்.

''நானும் கேக்கணும்னு இருந்தேன். அதை வெச்சுக்கிட்டிருக்கறதுக்கு யாருக்காவது கொடுத்துடலாமேம்மா...''

''அதை ஏன் கேக்கறே... இன்னிக்குகூட ஒருத்தர் அதை கேட்டு வந்தாரு...''- மல்லிகா அந்த நில விஷயத்தை தொட்டுப் பேச ஆரம்பித்தபோதுதான் அந்த அசம்பாவிதமும் நடக்க ஆரம்பித்தது!

ஓடிக்கொண்டிருந்த அந்த காரின் மேல் ஒரு பிரேக் பிடிக்காத லாரி அசுர வேகத்தில் வந்து மோதியது. அந்த சப்தம் செல்போனில் சந்தியா காதுகளில் கேட்டதோடு சரி. செல்போன் சிதைந்துபோனது.

செல்போன் மட்டும்தானா?

## 5

அக்கம் பக்கம் முழுக்க அந்த சிலை பற்றித்தான் பேச்சு. நடராஜனும் விசாலாட்சியும் சாமியாரைப் பார்க்க புறப்பட்டுவிட்டிருந்தனர். அப்போது அவர்கள் எதிரில் ஒரு தொண்ணூறு வயது மதிக்கத் தகுந்த வயதான பெரியவர் தடியை ஊன்றியபடி வந்து கொண்டிருந்தார். அவரை பார்க்கவும் நடராஜனும் விசாலாட்சியும் நின்றனர்.

அவரும் அருகில் வந்து அத்துவான அறைக்குழிக்குள் வானம் பார்த்தபடி கிடந்த அந்த சிலையை எட்டிப் பார்த்தார். பார்த்த வேகத்தில், ''அடக்கெரகமே! இது ஊரை விட்டுப்



போவலியா - இங்கனயேதான் கெடக்குதா?'' என்ற கேள்வி யோடு முணுமுணுத்தார்.

''ஐயா... அப்ப உங்களுக்கு இந்த சிலையைப் பத்தி தெரியுமா?''

''ஏன் தெரியாம... நல்லா தெரியும். இது ஜேஷ்டா தேவி யோட சிலை... நவபாஷாணத்துல செஞ்சது...'' என்றார்.

''ஜேஷ்டாதேவியா... நான் கேள்விப்பட்டதேயில்லையே?''

''இப்ப கோயில்ல வெச்சு கும்பிட்டுகிட்டு இருந் தால்ல எல்லாருக்கும் தெரியறதுக்கு... அதான் பத்தாம் நூற்றாண்டோட போயிடிச்சே?''

''என்னய்யா சொல்றீங்க?''

''இப்பதான்டா சக்தி, மாரியம்மன், லட்சுமி, அம்பாள்னு. அந்த காலத்துல, அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முந்தி ஜேஷ்டாதேவிதான் ஊருக்கே மகாலட்சுமி. ஆனா, இவளை கும்புடற விதமா கும்புடணும். வழிபாட்ல ஒரு தப்பு பண்ணாலும் அவ்வளவுதான்... ஊரே நாசமாய் போயிடும்...''

''என்னென்னமோ சொல்றீங்களே...''

''நான் எங்கடா சொல்றேன். என் காதுல விழுந்ததை சொல்றேன். இந்த ஜேஷ்டாதேவி சிலைதான் ஊர் எல்லை மாரியம்மன் கோயில்ல இருந்துச்சு. கோயிலுக்கு கூரையும் கிடையாது. இவளுக்கு கூரை ஆகாது...''

''ஏன் அப்படி?''

''எனக்கென்ன தெரியும். ஆனா, ஒரு விஷயம் நல்லா தெரியும். இவளை முறையா கும்புடாம விட்டப்போ ஊரே காய ஆரம்பிச்சிடிச்சு. எங்க பார் வறட்சி. ஒரு வருஷம்

ரெண்டு வருஷம் இல்லை... 13 வருஷம் மழை பெய்யாம போனா என்ன ஆகும்?”

– அந்த பெரியவர் சொன்னதை கேட்டு நடராஜனும் விசாலாட்சியும் வாயைப் பிளந்தனர். “அப்ப இமயமலைப் பக்கத்துல இருந்து வந்த ஒரு சாமியார்தான், இந்த சிலையை முதல்ல படுக்க வைங்க. மழை வரும்னார். அப்படிச் செய்யவும் மழை பிச்சுக்கிட்டு கொட்டுனுச்சி...”

– பெரியவர் சொன்னதில் நம்ப முடியாத பல செய்திகள்!

காரைக்குடி, ‘ஜி.ஹெச்.’

சீனிவாசன் உயிர் பிரிந்துவிட்டிருந்தது. மல்லிகா உயிரோ துடித்துக் கொண்டிருந்தது.

தலை தெறிக்க வந்திருந்தாள் சந்தியா.

உறவுக்காரர்களும் வந்து சேர்ந்திருந்தனர்.

சிலர் ஓடிவந்து சந்தியாவை கட்டிக் கொண்டு அழுதனர். சந்தியா உறைந்து போயிருந்தாள். அவள் வாழ்நாளில் துக்கம் என்றால் என்னவென்றே தெரியாதபடி வளர்ந்தவள். அவள் பிறந்ததில் இருந்து உறவினர்களின் மரணம்கூட நிகழவில்லை. எனவே, மரணம் பற்றியோ - அதன் தாக்கம் பற்றியோ லேசு பாசாககூட அவளுக்கு தெரியாது. சீனிவாசனும் அவளுக்கு அதை உணர்த்தியதில்லை.

அவள் சந்தித்த பிரிவுத் துயரமே முதல் முறையாக அவள் வேலைக்காக சென்னைக்கு சென்றபோதுதான் நேர்ந்தது. உண்மையில் மிக கொடுமையான நாட்கள் அவை. ஒரு அளவுக்கு மேல் அப்பா, அம்மா பிரிவை அவள் நெஞ்சால் சுமக்க முடியவில்லை. நடு இரவில்



எழுந்து அமர்ந்து கொண்டு அவள் அழுதபோது பக்கத்து படுக்கையில் இருந்த பெண் அதை கவனித்து ஆறுதல் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக தேற்றினாள்.

பெண்களுக்குப் பிரிவுத் துயரம் பழக வேண்டும். திருமண பந்தம் நிரந்தரமாக அவர்களைப் பிரித்து விடுகிறது. அதன் பின் தாய் தகப்பன்கூட ஒரு மூன்றாவது மனிதன் போலத்தான். தன் கணவன், தன் குழந்தை, தன் வீடு என்று வாழ்ந்தாக வேண்டியதுதான் பெண்ணின் வாழ்க்கைப் போக்கு. அதையே மாற்ற வேண்டும் என்பாள். சீனிவாசன் எப்போது திருமணப் பேச்செடுத்தாலும், ‘அப்பா.... உங்களையும் அம்மாவையும் நான் ஒருபோதும் பிரியமாட்டேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறவர் இதுக்கு சம்மதிச்சா கல்யாணம். இல்லேன்னா கல்யாணமே வேண்டாம்...’ என்பாள். சீனிவாசன் சிரிப்பார்.

“அம்மாடி... ஆயிரமாயிரம் வருஷத்து விஷயத்தை நீ என்னமோ ஒரு நாள்ல மாத்திடலாம்னு நினைக்கறே. உன் பாசம் எனக்குப் புரியுது. இதெல்லாம் கொஞ்ச நாள் தான்மா. நீ சந்தோஷமா உன் புருஷன் வீட்ல வாழ்ந்தா அதுதாம்மா எங்களுக்கு நீ எங்க கூட இருக்கறத விடவே பெரிய சந்தோஷம்” என்பார்.

“ஏன்பா.... எவ்வளவோ விஷயங்கள் காலத்தால மாறலையா... நான் மாத்திக் காட்டறேன்.

எப்பவும் பிள்ளை வீட்டுகாரங்கதான் பெண்பார்க்க வரணுமா? ஏன் நாம போய் பையனைப் பார்க்கக்கூடாது? அப்ப நீங்க ஏன் பையனை பார்த்து, ஆடத் தெரியுமா.. பாடத் தெரியுமான்னு கேக்கக் கூடாது- நாம் மாத்திக் காட்டுவோம்பா...” என்பாள். சீனிவாசன் அதை ரசித்து சிரிப்பார். அப்படி ரசித்து சிரித்த முகம் பேண்டேஜ்

போட்டு கட்டப்பட்டு மார்ச்சுவரியில் பிணங்களோடு பிணங்களாய் கிடந்தது. அதை பார்க்கப் பார்க்க சந்தியாவுக்கு அடிவயிற்றை என்னவோ செய்தது. மனித வாழ்வில் இப்படி எல்லாம் துன்பப் பகுதிகள் ஒளிந்திருப்பதே அவளுக்கு இப்போதுதான் தெரியும்.

'ஐயோ... இது என்ன கொடுமை?

சில மணி நேரங்களுக்கு முன்பு வரை கலகலவென்று பேசியவர் இப்போது இப்படிப் பொட்டலமாக கிடக்கிறாரே!' - அவள் கண்களில் நீர் முட்டிற்று.

அப்போது அவர் கட்டுப் போட்ட உடலின் மேல் மார்ச்சுவரி ரிப்போர்ட் ஷீட்டை பார்த்து அவர் பேரை எழுதி, அவருக்கு என ஒரு நம்பரையும் போட்டு அந்த உடம்பையும் ஒரு ஓரமாய் இழுத்துக் கிடத்தினான் மார்ச்சுவரி ஸ்வீப்பர்.

"அத்தை.... அப்பாவை அவன் குப்பை மாதிரி இழுத்து போடறான். போய் சொல்லுங்க அத்தை..." - சந்தியா வெடித்துவிட்டாள். அது அந்த ஸ்வீப்பர் காதில் விழவேயில்லை. வெளியே வந்து அவளிடமே, "உங்க பாடியோட பேர் என்ன?" என்று கேட்கவும், வாழ்க்கை இவ்வளவு நிலையற்றதா என்று கேட்க தோன்றியது.

"பாடி இல்லய்யா. அப்பா... என் அப்பா... பேர் சீனிவாசன்."

"ஓ! சீனிவாச பாடியா?" அவன் அந்த பாடியை விடவில்லை. சந்தியாவுக்கு அது முதல் காட்சி. அவன் வரையில் அது பத்தாயிரத்துக்கும் மேலான பிணங்களில் ஒன்று.

அப்போது டாக்டர் வந்தார். சந்தியாவிடம் சில தாள்களில் கையெழுத்து வாங்கினார். நடுநடுவே அதற்கு



இதற்கு என்று இஷ்டத்துக்கும் பணம் கேட்டனர். போலீஸ்காரர்கள் சர்டிபிகேட் தர வேண்டுமாம். அவர்கள் பிணத்தை அப்படியே நிறுத்தி வைக்க முடியுமாம். "ஆக்ஸிடெண்ட்ல சில விஷயங்கள் க்ளியராகல... இது கொலையாகூட இருக்கலாம்' என்று அவர்கள் ராகத்தை மாற்றிப் பாடினாலே தொலைந்தது. அது பணத்திற்காகதான்.

செத்தபின் மனிதன் எதற்குமே பயன்படுவதில்லை என்று யார் சொன்னது? ஜி.ஹெச்.ல போய் பார்த்தால் தெரியும். இறந்தவருக்கு இருக்கும் சமூக அந்தஸ்து, சொந்த பந்தங்கள் இவைகளை வைத்து அவர் ரேட் இஷ்டத்துக்கும் உயர்ந்துவிடும். ஆம்புலன்ஸில் பிணத்தை ஏற்றுபவனில் இருந்து டிரைவர் வரை காராம்பசுவாக நினைத்து கறந்து விடுவார்கள். அந்த காட்சிகள் எல்லாமும் அங்கேயும் அரங்கேறின. அப்பாவே போய்விட்ட நிலையில் பணம் என்ன பணம் என்கிற மன அமைப்புதான் அவர்கள் கறக்கவும் அடிப்படை.

டாக்டரும் கையைச் சொறிந்தார்.

"இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எல்லாம் போட்ருக்காராம்மா" என்று கேட்டார்.

"போட்ருக்கார்..."

"அப்படியே ஆக்ஸிடெண்ட் சர்டிபிகேட், மார்ச்சுவரி சர்டிபிகேட், டெத் சர்டிபிகேட் எல்லாமே ரொம்ப முக்கியம். நடந்தது 100% விபத்துன்னு நாங்க எழுதுனாதான் க்ளைம் அமவுண்ட் அப்படியே வரும். இது கொலையாகூட இருக்க வாய்ப்பிருக்குன்னா போச்சு..."

- டாக்டர் அவள் வயிற்றில் பீதியைக் கரைத்தார். சந்தியாவுக்கு புரிந்தது.

பள்ளியில் முதல் மதிப்பெண் எடுத்து மெடிக்கல் ஸீட் வாங்கி டாக்டர் ஆகத் தெரிந்தவருக்கு முதல் தர மனிதராக நடந்து கொள்ளத் தெரியாததை எண்ணி நெஞ்சு துடித்தது.

''உங்க லஞ்சம் எவ்வளவு சார்?'' என்று பளிச்சென்று கேட்டாள். அவருக்கு அவள் கன்னத்தில் அறைந்தது போல இருந்தது.

''ல... லஞ்சமா.... நோ.... நோ.... இதெல்லாம் ஃபார்மா லிட்டிம்மா, இந்த இடத்துல நீ வேலை பார்த்துப் பார் உனக்கு கஷ்டம் தெரியும். சாபக்கேடான உத்தியோகம்'' என்று அப்படியே தனது நிலையை நியாயப்படுத்த தொடங்கிவிட்டார். சந்தியா ஹேண்ட் பேக்கில் இருந்து இரண்டாயிரம் ரூபாவை நீட்டினாள். கொடுக்கும்போதே இதுக்காக நான், ''நாலு நாள் என் ஆபீஸ்ல கஷ்டப்படணும்'' என்று சொல்லத் தவறவில்லை.

எப்படியோ உடம்பு வந்து சேர்ந்தது.

எல்லோரும் வேனில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

சந்தியாவுக்கு 'ஐ.சி.யூ'-வில் இருக்கும் அம்மாவின் எண்ணம் நெஞ்சை நசுக்கியது.

''போய் அம்மாவைப் பார்த்துட்டு வந்துடறேன்...'' என்று இறங்கி ஓடினாள்.

ஐ.சி.யூ.!

உள்ளே மூக்கில் குழாய் செருகப்பட்ட நிலையில் பெரும் இழுவையோடு கிடந்தாள் மல்லிகா. அங்கே அருகேயே நின்றபடி இருந்தார் அந்த கறுப்பு மனிதர் தொண்டிமுத்து!

சந்தியா வரவும், ''அம்மாடி! நீதான் நம்ம புரொபசர் சார் மகளாம்மா?'' என்று கனிவுடன் ஆரம்பித்தார்.



''ஆமாம்.... நீங்க...''

''நான் யாருங்கறத அப்புறமா சொல்றேன். முதல்ல உங்க அம்மா நிலை என்னன்னு தெரிஞ்சுக்கோ. தலைல மூளைகிட்ட அடி. அதனால இப்ப உங்கம்மா கோமா ஸ்டேஜ்ல இருக்காங்க...''

''ஐயோ...'' - சந்தியாவுக்கு பின்முதுகில் யாரோ ஈட்டியால் குத்தியது போல் இருந்தது.

''அம்மாடி.. மனசை திடப்படுத்திக்கோ. எல்லாம் எப்பவோ செஞ்ச பாவம். விதி யாரை விட்டுச்சு...''

''நீங்க யார் சார்?''

''சொல்றேம்மா... என் பேர் தொண்டிமுத்து. என்னைப் பத்தி உங்கம்மா உன்கிட்ட எதுவுமே சொல்லலியா?''

''இல்லையே...''

''அடடா... நேத்துகூட உன் கிட்ட பேசப் போறதா சொன்னாங்களே...''

''பரவால்ல... இப்ப சொல்லுங்க... நீங்க யார்?''

''அம்மா... நான் ஒரு ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்ற நபர்மா... உங்க ஊர்ல உங்களுக்கு சொந்தமான இடம் ஒரு மூணு ஏக்கர் இருக்குல்ல?''

''அதுக்கென்ன?''

''அதை நான்தாம்மா வாங்கியிருக்கேன்.''

''என்னது... நீங்க வாங்கியிருக்கீங்களா?''

''ஆமாம்மா... என்கிட்ட அக்ரீமெண்ட்ல கையெழுத்து போட்டுட்டு ஒரு அம்பதாயிரம் அட்வான்ஸ் வாங்கிட்டு தான் உன்னைப் பார்க்கவே உன் அப்பாவும் அம்மாவும் புறப் பட்டாங்க...''

''என்னால இதை நம்ப முடியல.... அப்பா அதை விக்கவே போறதில்ல... அப்படி செய்தா அது பெரிய துரோகம்கற மாதிரில்ல சொல்லிக்கிட்டிருந்தாரு...''

''என்கிட்டயும் அப்படிதாம்மா சொன்னாரு. ஆனா, உங்கம்மாதான் வற்புறுத்தி சம்மதிக்க வெச்சுட்டாங்க.''

''நிஜமாவா?''

''அம்மாடி... இப்ப அதை எல்லாம் பேச நேரமில்ல. உன் வாழ்க்கைல நீ ரொம்ப முக்கியமான தருணத்துல வேற இருக்கே... முதல்ல போய் அப்பா காரியத்தை முடிப் போம். பிறகு மத்த விஷயத்தை பேசுவோம். வாம்மா...'' என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியே வேணை நோக்கி செல்லத் தொடங்கினார்.

சந்தியாவுக்கு எல்லாமே புதிதாகவும் புதிராகவும் இருந்தன!

# 6

நடராஜன் முன்னாலும் விசாலம் முன்னாலும் அந்த தொண்டு கிழம் ஜேஷ்டாதேவி சிலையைப் பார்த்தபடியே சொல்ல ஆரம்பித்திருந்தது.

''எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... எனக்கு அப்ப ஏழு எட்டு வயசு இருக்கும். இந்த சிலை அப்பவும் பூமிக்கடில தான் இருந்தது. அப்ப இந்த வீடு சேக்கப்பன் என்கிறவருக்கு சொந்தமாக இருந்தது. இதேபோல ஏதோ ஒரு மராமத்து வேலை பார்க்கறதுக்காக அவர் பள்ளம் தோண்டி னப்போ இந்த சிலை கண்ணுல பட்டுது. சாமி சிலையை யாரோ புதைச்சு வெச்சுருக்காங்களே. எதுக்குன்னு தெரியலியேன்னு ஊர்



பூரா பேச்சு. அப்பால இதை நிமிர்த்த ஒரு இடத்துல உக்காத்தியும் வெச்சாங்க. அன்னிக்கு ஆரம்பிச்சது ஊரோட கஷ்டம்... அப்புறம் 13 வருஷத்துக்கு அந்த கஷ்டம் நீங்கலை. 13 வருஷம் மழை இல்லை. ஊருணியில எதுவும் தண்ணி இல்லை. ஜனங்கள்ல சரிபாதி பேர் பசி பட்டினின்னு பஞ்சத்தாலேயே செத்துப் போனாங்க. சேக்கப்பன் அவர் குடும்பம் கூட காலரா, சீதபேதி வந்து செத்தாங்க. அதுக்கு முந்தி வரை செல்வ செழிப்போட இருந்த விசாலபுரம் அப்படியே காஞ்ச பய ஊரா மாறிப்போச்சு. இந்த ஊரில வாழ்ந்த பல செல்வந்தர்கள் வீடு வாசல் நிலம் நீச்சை எல்லாம் கிடைச்ச விலைக்கு வித்துட்டுப் போனாங்க. இப்ப இந்த ஊர்ல இருக்குதே கிரானைட் தொழிற்சாலை... இதுக்கான இடத்தை அன்னிக்கு ஏக்கர் நூறு ரூபாய்க்கு இதோட முதலாளியான குஜராத் சேட் வாங்குனாருன்னா நம்புவீங்களா?'' – அந்த வயதான பெரியவர் வாயில் இருந்து காலத்தால் மறைந்துபோன பல ரகசியங்கள் வெளிப்பட்டபடி இருந்தன.

''ஏக்கர் நூறு ரூபாய்க்கு... இன்னிக்கு பத்து லட்சத்துக்கு மேல போகுதே?''

பலரும் வாயைப் பிளந்தனர்.

''சரி... இப்ப இதை என்ன செய்யலாம்?'' என்று கேட்டார் நடராஜன்.

''உன் இடத்துல கிடைச்சிருக்கு. நீதான் முடிவெடுக்கணும்.''

''எனக்கு இது என் இடத்துல இருக்குறது புடிக்கலை. நான் இதை வெளியேத்திட்டு இங்க என் குடும்பம் தேவைக்கு கழிப்பறை கட்டிக்கப் போறேன்...'' என்று முடித்தார் நடராஜன்.

சிலை தூக்கி வெளியே நிறுத்தப்பட்ட(து).

அவ்வேளையில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. சிலையை நிமிர்த்திய அரை மணி நேரத்தில் [illegible] மேலும் மின்னல் சுள்ளென்று வெளிச்சம் அடித்தது.

அதைப் பார்த்த ஒருவர், "இது எருந்த உடனேயே வேலையைக் காட்டுதுச்ச பார் [illegible] மழையும் ஓடிப்போய்டுச்ச. முதல்ல இதை [illegible] கொண்டு போய் போடுங்கப்பா..." என்றார். அதை தொடர்ந்து அந்த சிலை ஒரு தள்ளுவண்டியில் தூக்கி வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. ஊர் எல்லையில் [illegible] பலகைக்கு பக்கத்தில் இருக்கிற ஊசிப் [illegible] மேட்டாந்தரை. அங்கே கொண்டு போய் [illegible] கொட்டுவது போல கொட்டிவிட்டு திரும்பினார் [illegible] காரன். அந்த நொடி வானில் திரும்பவும் மேகம் கூடி [illegible] மழை பெய்ய ஆரம்பித்தது!

*

மயானம்!

ஜி.ஹெச்சில் இருந்து ஒரு பெயிண்ட் உதிர்ந்துபோன ஸ்ட்ரெச்சரில் தூக்கி வரப்பட்டிருந்த சீனிவாசன் உடல் மயானத்தின் ஒரு ஓரத்தில் குப்பைபோல கிடத்தப்பட்டு விட்ட நிலையில், அவர்கள் ஒரு ஐந்நூறு ரூபாயை பிடுங்கிக் கொண்டு ஓடிப் போனார்கள்!

சந்தியாவுக்கு பெரியப்பா ஒருவர் இருக்கிறார். அவர் மகன் தினேஷ் நேராக மயானத்துக்கே வந்திருந்தான். அவன்தான் சீனிவாசனுக்கு காரியம் செய்ய வேண்டும் என்று உறவுக்காரர்கள் கூறிவிட்டனர்.

தினேஷ் ... நீ தான் மகன் உறவாவுறே - உன் சித்தப்பா



[illegible] முன்னே நின்னு பண்ணணும்ப்பா" என்று பேண்ட் [illegible] இருந்த அவனை நாலு முழ வேட்டிக்கு மாற்றி [illegible] விபூதி பட்டை போட்டுவிட்டு தலைக்கு [illegible] அடுத்து காரியங்களில் இறங்கிவிட்டனர்.

சீனிவாசனின் உடம்பில் முகம் மட்டும் வெளியில் தெரிந்தது. மற்ற பாகங்கள் கட்டுக்குள் அடங்கியிருந்தன. அந்த முகத்தின் மேலேயும் சில ஈக்கள்... சந்தியாவுக்கு [illegible] மேல் கோபம் வந்து அருகில் அமர்ந்து [illegible] விரட்டினாள். அப்படியே முகத்தை உற்றுப் பார்த்து குமுறிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள்.

சுற்றி இருப்பவர்களுக்கெல்லாம் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. பிறந்தவர்கள் ஒரு நாள் இறந்துதான் ஆக வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் எப்படியோ [illegible] அந்த வாழ்க்கை [illegible] வாழவே விரும்புகிறோம். [illegible] இயற்கை என்று எண்ணாமல் [illegible] போகும்போது அது இயற்கை போல அழுது புலம்பு [illegible] இருக்கக்கூடாததை இழப்பது போல [illegible] கிறோம்.

மயானத்தில் சில ஆடுகள் மேய்ந்தபடி இருந்தன. பிணங்களுக்கு போடப்பட்ட மாலைகளில் உள்ள பூக்களை எல்லாம் தின்று அவை ஒரு பக்கம் தங்கள் உயிரை வளர்க்கப் போராடியபடி இருந்தன. ஒரு இடத்தில் எத்தனைவிதமான காட்சிகள்!

அந்த தொண்டுமுத்துவும் மயானத்திற்கு வந்திருந்தார்.

அவரது படகு கார் மயானத்துக்கு வெளியில் நின்றிருந்தது. அவரைப் பார்த்த லட்சுமணனுக்கும், அழகப்பனுக்கும் ஆச்சரியம் அப்பி எடுத்தது.

''என்னங்க.. என்னமோ ரொம்ப வேண்டப்பட்டவர் மாதிரி மயானத்துக்கே வந்துட்டீங்க?'' என்று அழகப்பன் அவர் காதை கடித்தார்.

தொண்டிமுத்து முகம் ஒரு மாதிரி ஆனது.

''அதானே... ஆமாம், புரொபசர்தான் செத்துட்டாரே... அந்த நிலத்தை வாங்க முடியும்னு நீங்க எந்த நம்பிக்கைல இருக்கீங்க?'' என்று லட்சுமணன் ஒரு பக்கம் முணுமுணுத்தார்.

தொண்டிமுத்து அவர்கள் இருவரையும் கூர்மையாகப் பார்த்தார். பின் சடங்கை கவனிக்கத் தொடங்கினார்.

சந்தியா அழுது கொண்டேயிருந்தாள். மெல்ல அவள் பக்கமாய் போய் நிற்க முயன்றார் லட்சுமணன். அது தொண்டிமுத்துவை என்னவெல்லாமோ செய்தது. லட்சுமணன் மற்றும் அழகப்பனுடன் ஒரு ஓரமாக ஒதுங்கினார். பக்கத்தில் ஒரு சமாதி. அதன் மேல் ஒரு தாடி முளைத்த ஆடு. சமாதியில் இருபது வருடங்களுக்கு முன் செத்துவிட்ட பாண்டியம்மாள் என்பவளின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது

லட்சுமணன், தொண்டிமுத்துவிடம் உக்கார்ந்து பேசுவோமா என்று கேட்டார். சமாதி மேலேயே அமர்ந்தார் தொண்டிமுத்துவும்.

''சீனிவாசன் சார் இடத்தை எனக்கு விக்க சம்மதிச்சுட்டார். என்கிட்ட அட்வான்ஸ் வாங்கிட்டு போனப்புறம்தான் ஆக்ஸிடெண்ட் ஆச்சு...'' என்று ஆரம்பித்தார்.

''அப்புறம்?'' பதிலுக்கு லட்சுமணன் கேட்ட தொனியே கேலியாக இருந்தது.

''என்ன அப்புறம்? நான் என்ன கதையா சொல்றேன்.''



''கதையா இருந்தாதான் நாங்க ரசிப்போமே?''

''அப்ப உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

''அதான் கழுத்தைப் பிடிச்சு தள்ளாத குறையா அவர் உங்கள வீட்ட விட்டு வெளியேத்துனதை கண்ணால பார்த்தோமே.''

''அது வாஸ்தவம்தாங்க... ஆனா, அப்புறமா அவர் மனைவி மல்லிகா எடுத்துச் சொல்லி சார் கன்வின்ஸ் ஆயிட்டாரு.''

''அப்ப இடத்தை வாங்க அட்வான்ஸ் கொடுத்துட்டீங்க...''

''ஆமா... ரிஜிஸ்ட்ரேஷன்போது மிச்சப் பணத்தை கொடுத்து செட்டில் பண்ணிடுவேன்ல?''

''அதான் போய்ட்டாரே... என்ன பண்ணுவீங்க?''

''ஏன் பொண்டாட்டி இருக்காங்களே... மகள் இருக்கால்ல?''

''அவங்க கோமாவுல கிடக்காங்க... இந்த பொண்ணு இவங்க அப்பாவை போல நாலு மடங்கு. இது வந்து இடத்தை விக்கும்னு கனவுகூட காணாதீங்க...''

''அதான் நடக்காது... சீனிவாசன் சார் முழு சம்மதம்னு ஸ்டாம்ப் பேப்பர்ல எழுதி கையெழுத்து போட்டுருக்கார்...''

''கையெழுத்தா... அதை யார் வேணா போடலாம் ரேகை இருக்கா?''

''சந்தேகமா இருக்குதா... அந்த பத்திரம்கூட கார்லதான் இருக்கு - காட்டவா?''

''எங்க... காட்டுங்க பார்ப்போம்....'

- லட்சுமணன் துளிகூட நம்பாத பாவனையை காட்ட, தொண்டிமுத்து விலகி காரை நோக்கிப் போனார். அதற்குள் இருவரிடமும் குசுகுசுப்பு.

''லட்சு... இவன் பெரிய புளுகுனியா இருக்கானேப்பா.''

''விடாக்கண்டனாவும் இருக்கான். எனக்கென்னவோ நம்ம சீனு மேல இவனேகூட லாரி ஏத்தி கொன்னுருப்பான்னு தோணுதுப்பா...''

''நானும் அப்படித்தான் நினைக்கறேன். பெரிய ஆஸ்பத்திரில பொணம் கிடக்கவும் அங்கேயும் வந்துட்டானேப்பா...''

''அப்படி என்னப்பா அந்த இடத்துல இருக்கு... நமக்கு தெரிஞ்சு அது ஒரு சுடுகாடு. தோண்டுன இடமெல்லாம் எலும்புங்கதான் கிடைக்கும். என் இடத்துக்கு பக்கத்துல சுடுகாடான்னு நம்ம ஆனா ரூனா சுப்ரமணியம் செட்டியார் கோர்ட்ல கேஸ் போட்டாரு. கடைசில அரசாங்கம் இந்த சுடுகாட்டை ஊர் சுடுகாட்டாக்கிட்டு அந்த இடத்தை பொட்டல்னு அறிவிச்சிடிச்சு. ஆனா, அது நாங்க பரம்பரையா வெச்சிருக்கிற எங்க குலதெய்வ கோயில் நிலம்னு நம்ம சீனிவாசன் தாத்தா ராமநாதன் கோர்ட்டுக்கு போய் தங்களோட உரிமையை நிரூபிச்சாரு. அப்பால அவர் மகன் நடராஜன் அதுல புளியமரங்கள வெச்சு பயிர் பண்ணப் பார்த்தாரு. இதானே அதோட வரலாறு...''

''வரட்டும் விடு... இந்தாள் என்ன பண்றான்னு பார்ப்போம்.

- அழகப்பன் கார் கதவை மூடிவிட்டு திரும்பி வந்தபடி இருக்கும் தொண்டிமுத்துவை பார்த்தபடியே சொன்னார்.



சீனிவாசனுக்கான மயான காரியங்கள் ஒருபுறம் நடந்தபடி இருந்தன. சீனிவாசனை எரிமேடையில் கிடத்தி எருமுட்டைகளை அடுக்கத் தொடங்கியிருந்தனர்.

தொண்டுமுத்துவும் நெருங்கி வந்து கைவசமிருந்த அக்ரீமெண்ட் காப்பியை காண்பித்தார். அதில் நேற்றைய தேதியை குறிப்பிட்டு தெளிவாக அந்த மூன்று ஏக்கர் இடத்தை ஒரு ஏக்கர் ஐந்து லட்சம் எனும் கணக்கிற்கு மொத்தமாக பதினைந்து லட்ச ரூபாய்க்கு பேசி முடிக்கப்பட்டு அட்வான்ஸாக 50000 ரூபாய் கொடுக்கப்பட்டு சீனிவாசனும் கையெழுத்துப் போட்டிருந்தார். கீழே விரல் ரேகையும் இருந்தது.

இருவருக்குமே பகீர் என்றது.

''யோவ்... நீ பெரிய ஜித்தன்யா... கோடி ரூவா இடத்துக்கு 15 லட்சமா... யார்கிட்ட காது குத்தறே?''

''அது நான் மனசுல வெச்சிருந்த விலை. ஆனா, சீனிவாசன் சார் அஞ்சு லட்சத்துக்கே சம்மதிச்சுட்டாரு...''

''என்ன... அவர் இப்ப உயிரோட இல்லேங்கற தைரியத்துல எங்ககிட்ட கதை உட்டு பார்க்கறியா?''

''இதோ பாருங்க... உங்க கிட்ட எனக்கென்ன பேச்சு. இந்த இடத்துக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம். ஏதோ ஊர்க்காரங்களாச்சே - நான் விலாசம் கேட்டு வந்தப்போ வழி காட்டினீங்களேன்னு உங்ககிட்ட இதை எல்லாம் காமிச்சேன். ரொம்பவே எகிறுறீங்களே...''

- தொண்டிமுத்துவும் திமிற ஆரம்பித்தார்.

''பார்க்கறோம்யா... பார்க்கறோம்.. அந்த பொண்ணு சந்தியாகிட்ட நடந்த அவ்வளவையும் சொல்றேன். புரொபசர் கிட்ட கடைசியா நான்கூட, அந்த இடத்தை கொடுத்துத் தொலைச்சா என்ன என்று சொன்னப்ப நாய்

மாதிரி என்னைக் கடிக்கப் பார்த்தாரு. எல்லாத்தையும் சொல்றேன்....''

- லட்சுமணன் விரலை ஆட்டியவிதமே நீயா, நானா என்று பார்த்துவிடுவோம் என்கிற மாதிரிதான் இருந்தது.

அடுத்த நொடியே தொண்டிமுத்து சிரிக்கத் தொடங்கி விட்டார்.

''என்னய்யா சிரிக்கிறே... எங்களை பார்த்தா கேணப் பயலா தெரியுதா?''

''சேச்சே... அப்படி எல்லாம் எதுவும் இல்ல. உங்க தைரியம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. எனக்கு தைரியம் தான் பெரிய சொத்து.''

''இப்ப நீ விஷயத்துக்கு வா... இந்த பத்திரம் கையெழுத்தெல்லாம் செட்டப்புதானே?''

''ஆமாம்.. எனக்கு அந்த இடம் வேணும். நான் சொன்ன மாதிரி ஒரு கோடிய இப்பவும் தர தயாரா இருக்கேன். ஆனா, இந்த பத்திரப்படி அக்ரீமெண்ட்டுபடி 15 லட்சத்த அந்த பொண்ணு கைல கொடுத்து ரிஜிஸ்திரேஷன் ஆகட்டும். மீதி 85 லட்சத்தை உங்களுக்கு பிரிச்சுக் கொடுத்துடறேன். ஆனா, என் கூட கடைசி வரை இருந்து அந்த பொண்ணுகிட்டயும் பேசி ரிஜிஸ்திரேஷன் நடக்கும்படி செய்யணும். சம்மதமா?''

- தொண்டிமுத்து அவ்வளவு வேகமாக ஒரேயடியாக பணத்தால் அடிப்பார் என்று அவர்கள் இருவரும் துளிகூட எதிர்பார்க்கவில்லை!

விக்கித்துப் போய்விட்டனர்.

''இடத்துக்கு பதினஞ்சு லட்சம். ஆனா, எங்களுக்கு 85 லட்சமா? யோவ், என்ன எங்க காதுல பெரிய தாமரை பூவாவே வைக்கறதுன்னு முடிவு பண்ணிட்டியா?''



''சத்தியமா இல்லை. வேணும்னா அந்த பொண்ணுக்கு ஏக்கருக்கு 10 லட்சம்னு முப்பது லட்சத்த கொடுத்துட்டு உங்களுக்கு 70 லட்சம் தரவா?''

''ஏய், என்ன நீ... எக்ஸ்பிரஸ் வேகத்துல ஏலம் போடறே? நாங்க தெரியாமதான் கேக்கறோம் அப்படி என்னய்யா இருக்கு அந்த இடத்துல?''

''அது எதுக்கு உங்களுக்கு... கூடிய சீக்கிரம் இந்த ஊரே மாறப் போகுது. பெரிய பெரிய ஐ.டி. கம்பெனிங்க இந்த ஊருக்கு வரப்போகுது. அதுல பல வெளிநாட்டு கம்பெனிகளும் அடக்கம். இந்த ஊர்ல இருந்து ஆகாயத்துல சுத்திக்கிட்டிருக்கிற இன்சாட்டுங்கற விண்கப்பலை பிடிக்கறது ரொம்ப ஈசியாம். இதுக்கு பின்னால இப்படி நிறைய விஷயம் இருக்குது...''

''ஓ... அப்படிப் போகுதா கதை. இப்பல்ல புரியுது?''

- லட்சுமணன், அழகப்பனை அகன்ற கண்களுடன் பார்த்து கையை சொடக்கவும்...

''லட்சுமணா... அப்ப என் பேர்ல இருக்குற முப்பது செண்ட் இடத்துக்கும்கூட நல்ல மதிப்பு வரும்னு சொல்லு...'' என்று உற்சாகமானார்.

''ஓ... உங்க கிட்ட முப்பது செண்ட் இருக்கா... பலே! இன்னும் முப்பது ஏக்கராகூட நான் வாங்கிக்கறேன். நல்ல விலையும் தரேன். இந்த நிமிஷத்துல இருந்து நாமெல்லாம் ஒண்ணு - என்ன சொல்றீங்க?''

- தொண்டிமுத்து கையைக் குலுக்குவதற்காக நீட்டினார்.

லட்சுமணனும், அழகப்பனும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு விட்டு தொண்டிமுத்து பக்கம் திரும்பி கைகுலுக்காமல் வெறித்தனர்.

''என்ன சந்தேகமா இருக்குதா?''
''பின்ன... நீ என்ன காந்திக்கு பேரனா... இல்ல
அரிச்சந்திரன் வீட்டு கொல்லைல பொறந்தவனா?''
''யோவ்... இவங்களவிட களவாணிதான்யா சொல்
லுதல சுத்தமானவன். நாம ஒத்துமையா இருந்தா ஊரே
நம்ம கைல. இல்லாட்டி எனக்கொண்ணும் இல்ல. உங்க
ளுக்கு தர நினைக்கற பணத்தை நான் நம்ம அருணாசல
சாமிக்கு நன்கொடையா கொடுத்தாலே போதும். அவரே
என் வேலையை முடிச்சுக் கொடுத்துடுவாரு...'''

- தொண்டிமுத்து, சாமியாரை தொடவும், இருவருக்கும்
ஷாக்கடித்தது. இருவரும் தனியே போய் குசுகுசுவென்று
பேசிவிட்டு திரும்பி வந்து சரி என்று கட்டை விரலை
காட்டி சிரித்தனர்.

அதேசமயம் சீனிவாசன் உடல் மேல் தினேஷ் தீப்பந்
தத்தால் தீ மூட்டியபடி இருந்தான். சந்தியா ஓவென்று
பெரும் குலெடுத்து வெடித்து அழுததும் அந்த சுடுகாடு
முழுக்க கேட்டது!'

## 7

அன்று பெய்ய ஆரம்பித்த மழை அதன்பின் நான்கு
நாட்களுக்கு நிற்கவில்லை. ஊரெல்லாம் மழைநீர் தேங்கி
குறிப்பாக எங்கே அந்த ஜேஷ்டாதேவி சிலையைத் தூக்கிப்
போட்டிருந்தார்களோ அந்த இடத்தில் மழைநீரால் ஜேஷ்டா
தேவி சிலை மூழ்கும்வரை மழை பெய்து அது மூழ்கிய பிறகே
மழையும் நின்றது, அதை ஊரே திரண்டு போய் பார்த்து
ஆச்சரியப்பட்டது.



''அந்த சாமி சிலையை நாம தூக்கிப் போடவும் கோபம்
வந்து மழை கொட்டுனுச்சி. அது தண்ணியில் மூழ்கவும் மழை
நின்னு போச்சு... இதுல இருந்து ஒரு உண்மை நல்லா தெரியுது.
இந்த சாமி சிலை வெளிய இருந்தா மழை பெய்யும். உள்ள
இருந்தாதான் மழை நிக்கும்'' என்று.

ஊருக்குள் இப்படி பல மாதிரி பேசிக் கொண்டார்
கள். எல்லாமே நடராஜன்-விசாலாட்சி காதுகளுக்கும்
போயிற்று.

அவர்களால்தான் பிரச்னையே என்றும் பேச்சு திசை
மாறத் தொடங்கிவிட்டது. ஆனால், நடராஜனும் விசாலாட்
சியும் குன்னக்கடி சென்று சந்தித்த சாமியார் வேறுவிதமாக
கூறினார்.

''மனுஷக் கூட்டம் குறைவாகவும் ஜாதிகளோட
எண்ணிக்கை குறைவாகவும் இருந்த காலத்துல ஜேஷ்டாதேவி
வழிபாடுதான் முதல்ல இருந்தது. ஜேஷ்டாதேவி யாரோ
இல்லை. ஒரு வகைல லட்சுமியோட சகோதரி. மூத்தவள்னு
அர்த்தம் எடுத்துக்கலாம். இவளை முறையா வழிபடணும்.
எந்த வீடு சுத்தமாகவும், பக்தியாகவும் சத்திய தர்மத்தோட
யும் இருக்கோ அந்த வீட்டுக்குள்ள இவ நுழைய மாட்டா.
அதுக்கு மாறா தலையை விரிச்சுப் போட்டுக்கிட்டு குப்பை
யும் கூளமுமா ஒரு வீடு இருந்தாலோ, இல்லை அந்த வீட்டுப்
பெண் தீட்டை தீத்துக்காம இருந்தாலோ அங்க இவ முதல்ல
நுழைவா. இவ நுழைஞ்சா அவ்வளவுதான் அந்த வீடு... ஒரு
நல்ல விஷயத்தை அன்பா சொல்லி நடைமுறைப்படுத்தறது
ஒரு விதம். அதே நல்ல விஷயத்தை கண்டிப்போட சொல்லி
நடைமுறைப்படுத்தறது இன்னொரு விதம். ஜேஷ்டாதேவி
கண்டிப்பானவ... இவ இருக்குற ஊர்ல எல்லாரும் சுத்த

பத்தமா இருக்கணும். உண்மையா நடக்கணும். அப்படி நடக்காத போதுதான் இப்படி ஆகும்.

பிரச்னை உங்ககிட்ட இல்லை. ஊர்தான்.

ஊரைத் திருத்த முடியாதுன்னு நீங்க நினைச்சா இந்த சிலையை யாருக்கும் தெரியமா முன்பு இருந்த மாதிரியே புதைச்சு வெச்சுடுங்க ...'' என்றார்.

நடராஜனுக்கும் அதுதான் சரி என்று தோன்றியது!

ஆஸ்பத்திரி! கணவர் இறந்ததே தெரியாதபடி கோமாவில் கிடந்தாள் மல்லிகா. உயிர் இருக்க இறந்து போவது என்பது இதுதான். அம்மாவைப் பார்க்க வந்திருந்த சந்தியாவுக்கு கண்களிரண்டும் வெளிறிப்போய் விட்டிருந்தன. தனியே இருந்த டாக்டரைப் போய்ச் சந்தித்தாள்.

''டாக்டர்...''

''வாம்மா -உட்கார்...''

''அம்மா பத்தி...''

''அம்மா பத்தி தெளிவாவே சொல்றேம்மா. அம்மா உடம்புல எந்த பிரச்னையும் இல்லை. ஆனா, தலைல அடிப்பட்டதுல மூளை பாதிக்கப்பட்டிருக்கு. அதான் கோமாவுக்குப் போய்ட்டாங்க.''

''இதை குணப்படுத்த முடியும்தான?''

''இதுக்கு ஒரு டாக்டரா பதில் சொல்றதைவிட மனுஷனா பதில் சொல்றதுதாம்மா சரி. அந்த வகைல பார்த்தாக்கா 50%தான் சான்ஸ். ட்ரீட்மெண்ட் ஒர்க் அவுட்டாகி இந்த 50% அறுபது, எழுபதுன்னு உயர்ந்தா நிச்சயமா உங்கம்மா கோமாவுல இருந்து திரும்பிடுவாங்க.



ட்ரீட்மெண்ட் ஒர்க் அவுட்டாகலைன்னா அப்படியே தலைகீழா போகவும் வாய்ப்பிருக்கு.''

''உங்க வீட்ல யாருக்காவது இப்படி ஆயிருந்தா என்ன டாக்டர் பண்ணுவீங்க?''

''நான் போராடுவேம்மா. ஏன் சொல்றேன்னா... இவங்க சாகணும்னு விதி இருந்தாதான் உங்கப்பா மாதிரி அப்பவே செத்துப்போயிருக்கலாமே. எப்ப இவங்க உயிர் போகலையோ அப்பவே இவங்க வாழணும்கறதுதானே இறைவனோட விருப்பமா இருக்க முடியும்.''

டாக்டரின் அந்த யதார்த்தமான பதில் சந்தியாவுக்கும் பிடித்துவிட்டது மனதுக்கும் தெம்பாக இருந்தது.

''அப்ப அம்மாவுக்கு ட்ரீட்மெண்ட் கொடுங்க டாக்டர்... உங்க நம்பிக்கை, என் பிரார்த்தனை எல்லாம் கை கொடுக்கட்டும்...''

''நிச்சயம் கைகொடுக்குமா... நம்பிக்கை வை. ஆனா...'' இழுத்தார்.

''என்ன டாக்டர்?''

''கொஞ்சம் செலவாகும்மா...''

''கொஞ்சம்னா எவ்வளவு டாக்டர்?''

''நிரந்தரமா இவங்களுக்கு ஒரு நர்ஸை போடணும். இவங்க ரொடீன் பாடி ஆக்டிவிடீசை வாட்ச் பண்ணணும். அதுபோக மூளைக்கு ஸ்பெஷல் நியூரோ சர்ஜன் ஒருத்தர் வந்துதான் ட்ரீட்மெண்ட் தருவார். சமயத்துல மருந்தை ஃபாரின்ல இருந்து தருவிக்க வேண்டி வரலாம்.''

''அப்ப ஆயிரக்கணக்குல இல்லை... லட்சக்கணக்குல தான் செலவாகும்னு சொல்லுங்க.''

''ஆமாம்மா...''

"லட்சங்கள்னா எத்தனை லட்சம் டாக்டர்?"

"துல்லியமா சொல்ல முடியாது. ஆறு மாசத்துல உங்க அம்மா குணம் ஆயிட்டா ஒரு நாலஞ்சு லட்சம். அதுவே வருஷக் கணக்குல போனா பத்துப் பதினைந்து லட்சம் வரை ஆகும்..."

-டாக்டர் மென்று மென்று கூறிவிட்டார். ஆனால், சந்தியாவுக்கு தலைக்கு மேல் ஒரு மலை வந்து ஏறிக்கொள் எட்டுமா என்று கேட்பது போல் இருந்தது. நெடுநேரம் மௌனம் சாதித்தாள்.

"நீ யோசிச்சு நாளைக்கு கூட சொல்லும்மா..." என்றார் டாக்டர்.

"சப்போஸ் அவ்வளவு செலவு பண்ண முடியாதுன்னா டாக்டர்?"

"முடியாதுன்னா என்ன பண்ண முடியும்... இப்ப கொடுக்கற ட்ரீட்மெண்ட்டை நிறுத்தவேண்டியதுதான். பல்ஸ் கொஞ்சம் கொஞ்சமா அடங்கி ஒரு மூணு நாள்ல உங்கம்மா உயிரும் பிரிஞ்சுடும்." - டாக்டர் நிதானமான குரலில்தான் சொன்னார்.

ஆனால், சந்தியாவுக்கு அவள் உயிரேகூட சேர்ந்து போய்விடும் போல வலித்தது.

"நோ டாச்டர்..." என்றாள். கன்னக் கதுப்பில் கண்ணீர் உருண்டது.

"அப்ப செலவுக்கு வழி என்னன்னு பார்க்கறதுதாம்மா நல்லது...."

டாக்டர் அழுத்தமாக கூறவும், மௌனமாக எழுந்திருந்தாள்.

"ப்ளீஸ் டாக்டர்... அம்மாவுக்கான ட்ரீட்மெண்ட்டை தயவுசெய்து கன்டினியூ பண்ணுங்க. எனக்கு என் அம்மா



வேணும். அப்பா போனதையே என்னால தாங்க முடியல. அம்மாவும் போய்ட்டா நான் உயிர் வாழறதுல அர்த்தமே இல்லை டாக்டர்."

"உணர்ச்சிவசப்படாதம்மா... வீட்டுக்குப் போய் உன் உறவுக்காரங்க கிட்ட கலந்து பேசும்மா. அப்புறம் ஒரு முடிவுக்கு வா." - சந்தியாவும் மௌனமாக புறப்பட்டாள்.

★

பஸ்ஸை விட்டு இறங்கி ஊருக்குள் நடந்தபோது அவளையே சிலர் வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். தங்கள் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த அழகப்பனும், லட்சுமணனும் அவளருகில் வந்து, "என்ன சந்தியா. ஆஸ்பத்திரிக்கு போய்ட்டு வர்றியா?" என்று ஆரம்பித்தனர்.

"ஆமாம் மாமா."

"வீட்டுக்கு வந்திருந்தோம். யாரும் இல்லை. உன் பெரியப்பா தினேஷும், உங்க பெரியம்மாவும் மட்டும்தான் இருந்தாங்க..."

"மாமா, அத்தை, சித்தி, சித்தப்பால்லாம் இருந்தாங்களே."

"இப்பல்லாம் யாரும்மா சாவு வீட்ல பத்து நாளும் தங்கி இருக்காங்க. சுடுகாட்டில இருந்து வந்த உடனேயே குளிச்சிட்டு அடுத்த பஸ்ஸை பிடிச்சுப் போயே போயிட்டாங்க."

"ஆமா... டாக்டர், அம்மா விஷயத்துல என்னம்மா சொன்னார்?"

"இப்ப எதுவும் சொல்ல முடியாதுன்னுட்டார் மாமா! ஆனா, அம்மா பூரணமா குணமாயிடுவாங்கன்னு நான் நம்பறேன் மாமா..."

''நம்பும்மா. நம்பிக்கைதானே வாழ்க்கை. ஆனா, லட்சக்கணக்குல செலவாகுமேம்மா.''

''ஆமாம் மாமா... ஏற்பாடு செய்யணும்.''

''உனக்கென்னம்மா... அதான் அந்த 3 ஏக்கரா இடம் இருக்குதே, அதை வித்தாதான் ஒரு பத்து பதினஞ்சு லட்சம் வருமே?''

-அழகப்பன் மெல்ல ஆழம் பார்ப்பது போல ஆரம்பித்தார்.

சந்தியாவுக்கு கொஞ்சம் சுரீர் என்றது. எதுவும் பேசாமல் நடந்தாள்.

வீட்டை அடைந்தபோது அவர்கள் சொன்னது போல பெரியம்மாவும் தினேஷும் மட்டும் இருந்தனர்.

''பெரியம்மா... எங்க யாரையும் காணோம்?''

''எல்லாம் ஊருக்குப் போயிட்டாங்கம்மா. உன்கிட்ட போன் பண்ணி பேசறோம்னாங்க.''

''அப்படி என்ன அவசரம் பெரியம்மா?''

''என்னம்மா அப்படிச் சொல்லிட்டே... உங்கம்மாவை குணப்படுத்த நீ பணம் கிணம் கேட்டுட்டா...'' - பெரியம்மா சொன்னபோது சுரீர் என்று தைத்தது. அந்த நொடி அப்பாவும் அம்மாவும் எத்தனை பெரிய நிழல் - எத்தனை பெரிய பாதுகாப்பு சுவர் என்றுதான் தோன்றிற்று.

சரசரவென்று கண்ணீர் திரண்டு வந்தது.

''அழாதே சந்தியா... மனசை தேத்திக்கோ... அம்மா விஷயத்துல என்ன முடிவெடுத்திருக்கே?''

''என்ன முடிவெடுக்க முடியும் பெரியம்மா... ட்ரீட்மெண்ட் கொடுத்து காப்பாத்தறதுதானே நமக்கு இருக்கற ஒரே வழி.''



''ஏதோ கைல கால்ல காயம்னா நீ சொல்றது சரி... இது கோமா. கடைசி வரை உங்கம்மா கண் திறக்காமலே போயிட்டா?''

''நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க பெரியம்மா?''

''விட்டுடு... அப்பாவோட சேர்ந்து அம்மாவும் போகட்டும். இந்த வீடு இருக்கு சொந்தமா. இது போக 3 ஏக்கரா இடம் உங்கப்பாவுக்குன்னு இருக்கு. நீயும் வேலை பார்க்கறே. சம்பாதிக்கறதால நல்ல இடம் வரும். புருஷன் பிள்ளை குட்டின்னு வாழற வழியைப் பார்...''

- பெரியம்மாவை வெறித்த விழிகளோடு பார்த்தாள் சந்தியா.

''ஏம்மா.. நான் சொன்னது உனக்கு பிடிக்கலையா?''

''ஆமாம் பெரியம்மா...''

'பல லட்சம் செலவு பண்ணி வீணா போய்ட்டா என்னம்மா பண்ணுவே?''

''போகட்டும் பெரியம்மா...''

''பணத்துக்கு எங்க போவே?''

''அது என் கவலை பெரியம்மா...''

''நீ பேசுறத பார்த்தா எல்லாத்தையும் நான் சமாளிச்சிக்கறேன்னு சொல்ற மாதிரி இருக்கே?''

''ஆமாம் - அப்படித்தான். எங்கம்மாவை கொல்ல சொல்ற யாரும் எனக்கு தேவையில்லை.''

''நான் உன் நல்லதுக்குத்தான் சொன்னேன்...'

''ஆனா, என் மனசு அப்படி அதை பார்க்கலை - பார்க்கவும் முடியலை.''

''சரிம்மா. அப்புறம் உன் இஷ்டம்... தினேஷ் புறப் படுப்பா. சாயந்தர பஸ்ஸை பிடிச்சா காலைல கோழி கூப்பிட நாமா நம்ம வீட்டுக்குப் போய்டலாம்.''

- அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் இருவரும் கூட புறப்பட்டு விட்டனர். சந்தியா மட்டும் தன்னந்தனி யாக... சுவர்களில் அப்பா அம்மாவின் புகைப்படங்கள். அவள் குழந்தையாக இருந்ததில் இருந்து படிப்படியாக அவள் வளர்ந்தது வரை விதம் விதமாய் புகைப்படங்கள்.

பார்க்கப் பார்க்க மனதை உருக்கிற்று.

உலகில் யாருக்கும் இப்படி ஒரு நிலை வரக்கூடாது.

குமுறினாள். அப்போது வாசற்புரம் ஒரு உருவம் ஏறிட் டாள்.

தொண்டிமுத்து - முகத்தில் ஒருவித சிரிப்புடன்.

''வரலமா?''

''வாங்க...''

உள்ளே வந்தார். வரும்போதே கையில் மாலை. அதை சீனிவாசன் புகைப்படத்துக்கு அணிவித்தார்.

பின் இடுப்பு மடிப்பில் இருந்து 500 ரூபாய் கட்டுகள் மூன்றை வெளியில் எடுத்தார். மொத்தமாக ஒண்ணரை லட்சம்.

''என்ன இது?''

''பணம்மா... போய் முதல்ல அம்மாவுக்கு ஆஸ்பத் திரில கட்டு.''

'''நீங்க யார் எனக்கு பணம் தர?''

''என்னம்மா இப்படி கேட்டுட்டே... இது உன் பணம் தாம்மா. நான்தான் ஆஸ்பத்திரிலேயே சொன்னேனே....



உங்கப்பா என்கிட்ட இரண்டு நாள் முந்தி அக்ரீமெண்ட் போட்டார்னு...''

''என்னால அதை நம்ப முடியல....''

''இந்த அக்ரீமெண்ட் பேப்பரை பாரும்மா...''

- எடுத்து நீட்டினார். அதில் தெரிந்த கையெழுத்து சந்தியாவை கட்டிப் போட்டது.

''இப்ப என்ன சொல்றதுன்னே தெரியல சார்...''

''இப்ப என்ன சொல்றதுன்னே தெரியல சார்...''

''ஒரு வகைல உனக்கு நல்லதுதானேம்மா இது... எல்லா சொந்தக்காரங்களும் ஓடிட்ட நிலைல உனக்கும் உங்கம்மாவை காப்பாத்த பணம் தேவைப்படுது. நான் தரப் போற 15 லட்சம் உங்கம்மாவை காப்பாத்தினா சந்தோஷம் தானே?''

- தொண்டிமுத்து பாயிண்ட்டோடு பேசவும், சந்தியா வால் பதிலேதும் பேச முடியவில்லை. மௌனமாக பணத்தை வாங்கிக் கொண்டாள்.

''மீதி பணத்தை வர்ற வெள்ளிக்கிழமை பத்திரப் பதிவின்போது தரேம்மா. காலைல 11.30-க்கு நல்ல நேரம். கையெழுத்து போட வந்துடு. நான் வண்டி அனுப்பறேன். வரும்போது மறக்காம நிலம் சம்பந்தப்பட்ட ஒரிஜினல் டாகுமெண்ட்ஸ் எல்லாத்தையும் கொண்டு கிட்டு வந்துடு...''

சொல்லிவிட்டு வெற்றிச் சிரிப்போடு வெளியேறி னார்.

பணத்தை கையில் வைத்தபடி எதுவும் பேசாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள் சந்தியா.

## 8

ஜேஷ்டாதேவி சிலையைப் பார்க்க வந்திருந்தார் குன்னக்குடி சாமியார். கூடவே அவரது தலைமை சிஷ்யன் அருணாசலம். மேட்டு நிலத்தில் தண்ணீர் வற்றி இடுப்பள வுக்கு அந்த சிலை வெளியில் தெரிந்தபடி இருந்தது. கரையில் இருந்தபடியே பார்த்த சாமியார் அங்கிருந்தே கற்பூரம் காட்டி கன்னத்தில போட்டுக் கொண்டார். அப்போதே அந்த நீர்நிலை ஓரமாக மீன்கள் செத்து மிதந்து கொண்டிருந்தன. சாமியாரோடு வந்திருந்த சிலர்,

"சாமி! இது கிடக்கற தண்ணீரில் வசிக்கிற மீன்கூட செத்துப் போச்சு பாருங்க... இதை முதல்ல எங்கயாவது கண்காணாத இடத்துல கொண்டு போய் போட்டுடனும் சாமி" என்றனர். பதிலுக்கு அவர்களை முறைத்தார் சாமியார்.

சாமியார் வந்து சிலையைப் பார்ப்பது தெரிந்து நடராஜனும் விசாலாட்சியும் மேட்டு நிலத்துக்கே ஓடி வந்து சேர்ந்தனர்.

"சாமி..."

"வா, நடராஜா... அம்பாளை பார்த்து கன்னத்துல போட்டுக்க...."

"கும்பிடச் சொல்றீங்களா சாமி?"

"பின்ன... இவள் கும்பிட்டா கோடி தர்றவ.. கெட்ட எண்ணத்தோட வந்தா தெருக்கோடில தள்ளிடுவா..."

"நீங்க சொன்ன மாதிரி இது ஊர்ப் பிரச்சனை... ஊரை திருத்த நான் யார் சாமி?"



"அப்ப உன் நிலத்துல, கொண்டு போய் வெச்சு கோயில் கட்டு."

"கோயில் கட்டறதா.. பயமா இருக்கு சாமி... பாருங்க மீனுங்க என்ன பாவம் பண்ணிச்சு?"

"பைத்தியம் மாதிரி பேசாதே... மீனோட சாவுக்கு காரணம் வேற..."

"அது என்ன சாமி?"

"காதை கொண்டா சொல்றேன்..."

- நடராஜன் காதைக் கொடுக்கவும், அவரும் ஏதோ சொன்னார். நடராஜன் முகத்தில் பலத்த வியப்பு. அதன் பின் எதுவும் பேசவில்லை. "சாமி! நான் பஞ்சாயத்துல தீர்ப்பான எங்க இடத்துல கொண்டு போய் வெச்சு கோயில் கட்டறேன் சாமி. இந்த சாமியை நிச்சயம் நான் நல்லபடியா கொண் டாடுவேன்..." என்ற அவரிடம் பலமான மாற்றம்.

உடன் இருந்த சிஷ்யன் அருணாசலம் முகத்திலும் லேசான அதிர்ச்சி.

சாமியார் விலகவும், நடராஜனிடம் போய், "சாமி உங்க காதுல என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

பதிலுக்கு நடராஜனும், "அது தெய்வ ரகசியம் - வெளிய சொன்னா சாமி குத்தமாகிடும்" என்றார்.

அருணாசலம் முகத்தில் திகைப்பு!

இரவு நேரம்!

மழை வரும் போல இருந்தது.

மெல்ல எழுந்திருந்த சந்தியா திறந்து கிடந்த ஜன்னல் களை எல்லாம் சாற்றிவிட்டு வந்தாள்.

வாசற்கதவையும் தாழிட்டுவிட்டு வந்து படுக்கையில் விழுந்தாள். காலையில் இருந்தே எதையும் சாப்பிடவில்லை. சாப்பிடவும் தோன்றவில்லை. மனசு வெறுமையிலும் ஒளியிழந்தும் இருக்கும்போது சாப்பாட்டில் எப்படி புத்தி போகும்?

படுக்கையில் விழுந்தவள் எதிரில் சுவரில் தொங்கியபடி இருந்த அப்பாவின் புகைப்படம் இடவலமாக ஆடியபடி இருந்தது. பலத்த காற்றுக்கு படம் ஆடுவது சகஜம்தான் என்றுதான் முதலில் அது சந்தியாவுக்கு பெரிதாகப்படவில்லை. ஆனால், கதவுகளை அடைத்து விட்டு வந்த பிறகும் படம் ஆடவும், அதன் சப்தம் கேட்கவும் சந்தியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எழுந்து சென்று படத்தை கையால் தொட்டு நிறுத்தினாள்.

நிசப்தம்?

திரும்பி வந்து அமர்ந்தாள்.

திரும்பவும் படம் ஆட ஆரம்பித்தது.

''அப்பாாாா!'' மனதுக்குள் பயத்தோடு கலந்த ஒரு பெரும் குரல் அவளுக்குள் ஒலிக்கத் தொடங்கியது.

அந்த அறைக்குள் அவளைத் தவிர இன்னொருவர் வந்துவிட்டது போலவும் பிரமை தட்டியது. அதற்கு ஏற்ப சீனிவாசன் எப்போதும் அமரும் நாற்காலியும் ஆட ஆரம்பித்தது. சந்தியாவுக்கு புரிந்துவிட்டது.

''அப்பா!'' என்றாள் சற்று திடமான குரலில்.

நாற்காலி ஒரு வினாடி நின்று ஆமோதித்தது.

''ஐயோ, அப்பா... நீங்கதான் வந்துருக்கீங்களா... என்னப்பா இப்படிப் பண்ணிட்டீங்க... எங்கள இப்படியா தவிக்க விட்டுட்டுப் போவீங்க...'' என்று அந்த நாற்காலியில் அவர் இருப்பதாகவே பாவித்து அழுதபடியே பேசினாள் சந்தியா. அடுத்த நொடி ''அம்மாடி...'' என்றொரு காற்றுக் குரல்.



''அப்பா...''

''நடந்தது விபத்து இல்லை...''

''ஐயோ! அப்பா...''

''திட்டமிட்ட கொலை...''

''ஐயோ... நிஜமாவா?''

''அந்த தொண்டிமுத்து ஒரு கொலைகாரன்...''

''அந்த தொண்டிமுத்து ஒரு கொலைகாரன்...''

''இப்ப வந்து பணம் கொடுத்துட்டுப் போன நபராப்பா...''

''அவனேதான்.... அவன் கிட்ட எச்சரிக்கையா இரு...'' - காதில் ஒலித்த காற்றுக் குரல் சந்தியாவை அப்படியே புரட்டிப் போட்டுவிட்டது. அதன்பின் பெரும் நிசப்தம். சந்தியாவுக்கு அதுவரை தன் காதில் மட்டும் ஒலித்த குரல் உண்மையில் அப்பாவுடையதுதானா, இல்லை பிரமையா என்றும் ஒரு கேள்வி எழுப்பி நின்றது.

எழுந்து ஹாலின் விளக்கைப் போட்டாள்.

குளித்தது போல வியர்த்திருந்தாள். மெல்லத் திரும்பி சுவரில் மாலையோடு தொங்கியபடி இருந்த சீனிவாசனின் படத்தைப் பார்த்தாள். அதில் இப்போது எந்த ஊசலாட்டமும் இல்லை.

ஒருவேளை பிரமைதானோ?

அழுத்தமாய் மனதில் கேள்வி மூண்டது.

ஒரு சாவு விழுந்த வீட்டில் முதல் பத்து நாட்களில் இதுபோல சில சம்பவங்கள் நிகழக்கூடும் என்பதால்தான்

உறவினர்கள் புடை சூழ இருப்பதும், மேளதாளம் முழங்கிட ஆட்டபாட்டங்களை வைப்பதற்கும் ஆத்மாக்கள் அங்கே அலையக் கூடாது என்பதுதான் காரணம் என்றும் சீனிவாசன் எப்போதோ சொன்னது ஞாபகத்தில் வந்தது. தெருவில் ஒரு கிழவி போய்ச் சேர்ந்துவிட்டாள். ஒருபுறம் ஒப்பாரி என்றால் மறுபுறம் கொட்டு சப்தம். காது பிய்ந்து போனது. பொறுக்க முடியாமல் சீனிவாசனிடம், இதெல்லாம் என்னப்பா காட்டுமிராண்டித்தனம் என்று அவரிடம் கேட்டதற்கு அப்போது அவர் சொன்ன பதில்தான் அது. அதில் சாவு வீட்டை இறந்தவர் ஆத்மா சுற்றிச் சுற்றி வரும் என்று சொன்னது மட்டும் பகுத்தறிவுச் சிந்தனையை மீறிக்கொண்டு சந்தியா மனதில் தங்கிவிட்டது.

அது இப்போது அவள் மனதில் முண்டிக்கொண்டு நின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் தன் காதில் ஒலித்த குரல் அப்பாவின் குரலாகத்தான் இருக்க வேண்டும் என்றும் மனது நம்பப் பார்த்தது.

அப்போதுதான் தான் மட்டும் தனியாக இருப்பதும் தன் எண்ணத்தை பகிர்ந்துகொள்ளக்கூட ஒருவர் இல்லாத சோகமும் நெஞ்சை அழுத்தியது.

பெரியம்மா, தினேஷிடம் தான் அவ்வளவு கடுமையாக பேசியிருக்க தேவையில்லையோ என்றும் தோன்றிய போது வாசற்கதவு தட்டப்படும் சப்தம்.

'யாரோ வந்திருக்கிறார்கள்... யாராக இருக்கும்?' - கேள்வியோடு போய் கதவைத் திறந்தாள்.

வெளியே தோளில் தொங்கும் தோல் பை சகிதம் ஒரு இளைஞன். வாசல் விளக்கை போடவும்தான் அவன் முகம் தெரிந்தது. சந்தியாவின் அத்தை மகன் கண்ணன்!

''கண்ணா! நீயா?''



''நானேதான்... என்ன சந்தியா நீ மட்டும்தான் இருக்கிறாயா - யாரையும் காணோம்?''

''உள்ளே வா... உள்ள போய் பேசுவோம்.. இப்பதான், ஐயோ தனியா இருக்கோமேன்னு நினைச்சேன். நல்லவேளை நீ வந்துட்டே...'' என்று திரும்பி நடந்தபடியே பேசினாள்.

அவனும் அவளை தொடர்ந்தான்.

ஹாலில் இருந்த மேஜை மேல் தன் பேக்கை வைத்தான். திரும்பி சுவரில் தெரிந்த சீனிவாசனின் படத்தை பார்த்தான். நகர்ந்து அதன் அருகில் போய் நின்று படத்தையே வெறித்துப் பார்த்தான். கண்ணிரண்டும் கண்ணீர்த் துளிகளை உருட்டி விடத் தொடங்கியது. அது சந்தியாவுக்கும் சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

கண்ணன் அவளது அத்தை மகன்.

அத்தை காதல் திருமணம் செய்து கொண்டவள்.

அதனால் அத்தையை சீனிவாசன் குடும்பம் ஒதுக்கி வைத்துவிட்டது. எப்போதாவது ஏதாவது பொது நிகழ்வில் பார்த்துக் கொள்வதோடு சரி. அப்போதுகூட பேச்சு கிடையாது. ஆனால், விதிவசத்தால் அத்தை மகன் கண்ணன், சீனிவாசனின் கல்லூரியிலேயே அவர் வகுப்பு மாணவனாகவே படிக்க நேர்ந்ததுதான் விந்தை. அப்போதுகூட மாமா என்கிற தனது உறவுமுறையை காட்டாமல் கடுமையாகவே இருந்துவிட்டார் சீனிவாசன். கண்ணன் முதல் மாணவனாக தேர்வு பெற்ற பிறகு அதற்கான பேட்டிகளின்போது தன் வெற்றிக்கு புரொபசர் சீனிவாசன்தான் காரணம் என்று சொன்ன பிறகே சீனிவாசனுக்கும் அவன் மேல் ஒரு ஈடுபாடும் பாசமும் ஏற்படத் தொடங்கியது.

ஒரு நாள் வீட்டிற்கே அழைத்து கண்ணன் யார் என்ற உண்மையை மனைவி மல்லிகா, மகள் சந்தியா முன்

போட்டு உடைத்த பிறகே அவர்களுக்கும் தெரியவந்தது. ஆனாலும் கண்ணனின் தாயைச் சந்திக்கவோ பேசவோ அவர் தயாராக இல்லை. கண்ணனும் நல்ல வேலை கிடைத்து கேரளாவில் உள்ள எர்ணாகுளத்தில் பணியில் சேர்ந்துவிட்டான்.

அவன்தான் இப்போது வந்திருக்கிறான்.

கண்ணனும் கண்ணீரைத் துடைத்தபடி திரும்பி சந்தியாவை ஏறிட்டான். பின் மெல்லிய குரலில்...

''மாமாவோட சாவுக்கு என் வீட்ல இருந்து யாராவது வந்தாங்களா சந்தியா?'' என்று ஆரம்பித்தான்.

'''இல்ல கண்ணன். ஒருவேளை வந்துருக்கலாம். நான்தான் உன் வீட்ல யாரையும் பார்த்ததே இல்லையே. அதனால எனக்கு அடையாளம் தெரியாமலும் போயிருக்கலாம். அம்மாவும் ஆஸ்பத்திரில இருக்கிறதால எனக்கு எடுத்துச் சொல்லவும் யாரும் இல்லை.''

''போகட்டும்... நான் வந்துருக்கேன். நீ தைரியமா இரு சந்தியா.''

''உன் ஆறுதலுக்கு நன்றி கண்ணன். ஆமா, உனக்கு அப்பாவோட இறப்பு எப்படித் தெரிய வந்தது. நீ இருக்கிறது எர்ணாகுளமாச்சே?''

''உண்மைதான்... இப்ப மணி என்ன?'' - கேட்டுவிட்டு ஹாலில் உள்ள கடிகாரத்தை பார்த்தான். அதில் மணி 11-ஐ தொட்டிருந்தது.

''இன்னிக்கு பகல் 11 மணிக்கு நான் எங்க ஆபீஸ்ல ட்யூட்டியில் இருந்தேன். நேத்து ராத்திரியும் சரியா தூக்கமில்லை. அதிகாலை 4 மணி வரை கம்ப்யூட்டரோட மல்லுகட்ட வேண்டியதா போச்சு. அதனால அந்த 11 மணி வேளைல அசந்து தூங்கிட்டேன். ஒரு பத்து நிமிஷம்தான்



கண் அசந்துருப்பேன். அதுக்குள்ள ஒரு கனவு உன் அப்பாவும் அம்மாவும் ஒரு கார்ல போய்க்கிட்டிருக்கிற மாதிரியும் அது விபத்துக்குள்ளாகற மாதிரியும்... பதைச்சு போனப்போ தூக்கம் கலைஞ்சது. அப்பதான் அம்மாகிட்ட இருந்து போன் வந்தது, நிஜமாலுமே விபத்துல மாமாவும் அத்தையும் இறந்துட்டாங்கன்னு. என்னால நம்பவே முடியல. ஒரு நிமிஷம் நான் அப்படியே ஸ்தம்பிச்சு உக்காந்துட்டேன். அம்மா போன்லயே அழுதாங்க. துக்கம் கேட்க உங்க வீட்டுக்குப் போகக்கூடாதுன்னு என் அப்பா தடுக்கறதாகவும், அதை தன்னால மீற முடியுமான்னு தெரியலன்னும் சொல்லி அழுதாங்க. விடுங்கம்மா. நான் போறேன்னு சொல்லி உடனே லீவு போட்டுட்டு ஒரு டாக்ஸி பிடிச்சு புறப்பட்டு வர்றேன் சந்தியா...''

- கண்ணன் சொன்ன விஷயங்கள் சந்தியாவை சிலிர்ப்பில் ஆழ்த்தின.

''கண்ணன்! அப்பா இறந்ததும் விபத்துலதான். உனக்கு அதே மாதிரி கனவு வந்தது உண்மைல ஒரு ஆச்சரியமான விஷயம். இது எப்படி? இங்க ஒரு அஞ்சு நிமிஷம் முந்தி எனக்கும் சில அமானுஷ்ய அனுபவங்கள். அப்பா இந்த அறைக்குள்ள அதோ அந்த நாற்காலி உக்கார்ந்துகிட்டு எப்படி என்னைப் பார்த்து பேசுவாரோ அதே மாதிரி அவர் என்னைப் பார்த்து பேசறாரு. நடந்தது விபத்து இல்லம்மா... கொலைன்னும் சொல்றாரு! இதை பிரமைன்னு சொல்றதா, இல்லை நிஜம்தானா... பெரிய குழப்பமா இருக்கு எனக்கு. ஐயோ! இந்த விஷயத்தை சொல்லி கருத்து கேட்ககூட யாருமில்லாம இருக்கேனேங்கற மாதிரி நினைச்சப்பதான் நீ வந்து கதவை தட்டுனே...''

- சந்தியா காதோரமாய் வியர்வை ஒழுக சொன்னதைக் கேட்டு கண்ணனின் முகத்தில் பலத்த மாற்றங்கள்.

''என்ன கண்ணன்... ஏன் உன் முகம் ஒரு மாதிரி ஆகுது.''

''சந்தியா... நான் கார்ல வரும்போது என்னை மீறி கண்ணசந்துட்டேன். அப்பவும் உன் அப்பா கனவுல வந்தாரு. நீ சொன்னியே கொலைன்னு, அதைத்தான் அவரும் சொன்னாரு...''

– கண்ணன் சொன்ன மறுநொடி சந்தியாவிடம் இமைப்பது நின்றுபோனது. விழியிரண்டும் குத்திக் கொண்டு விட்டன.

கச்சிதமான அந்த நொடிகளில் சுவரில் தொங்கிய படத்திடமும் திரும்பவும் ஊசலாட்டம்!

இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

'சந்தேகப்படாதீர்கள்... நான்தான். நானேதான்' என்று சொல்வதுபோல் இருந்தது அந்த ஊசலாட்டம்.

''கண்ணன்...''

''சந்தியா! மாமாவேதான்...''

''இதை என்னால ஜீரணிக்க முடியல கண்ணன். அப்பாவை கொன்னு அம்மாவையும் படுத்த படுக்கையாக் கிட்ட அந்த கறுப்பு குண்டனை இப்பவே என் கையால குத்திக் கொல்லணும் போல இருக்கு...''

– சந்தியா உணர்ச்சிவசப்பட்டாள்.

''யார் அவன் சந்தியா... அவன் பேர் என்ன?''

''தொண்டிமுத்து... எங்களுக்குன்னு இருக்கிற மூணு ஏக்கரா இடத்துக்காக அப்பாவைக் கொல்ற அளவுக் குப் போய்ட்டான்.''

''கொல்ற அளவுக்குன்னா... அப்பா அவனுக்கு இடத்தை கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாரா -இல்லை ஏமாத்தி எழுதி வாங்கப் பார்த்தானா?''



''அப்பா விக்க முடியாதுன்னுதான் சொல்லியிருக் கணும். ஏன்னா அது நம்ம குடும்ப இடம், பரம்பரை சொத்து, வேலி போட்டு உள்ள ஒரு ஆடுமாடு கூட நுழைய முடியாதபடி அப்பா பாதுகாத்துட்டு வந்தாரு.. ஏதாவது தோட்டம் போடலாமேப்பான்னு சொல்வோம். இல்லம்மா, அங்க அதையும் செய்யக்கூடாது. அது அப்படியே இருக் கறதுதான் சரின்னு சொல்வார். ஏன்னு கேட்டா அதெல் லாம் உனக்கு எதுக்குன்னு சொல்லுவார்..''

''அப்ப அந்த இடத்துக்கு பின்னால ஏதோ ரகசியம் இருக்கு. அதுதான் தொண்டிமுத்துவை விபத்துங்கற பேர்ல கொலை வரை செய்ய வெச்சிருக்கு.''

''கூட்டிக்கழிச்சா அப்படிதான் வருது. நடந்தது கொலைன்னு சொன்னா அப்பா இந்த ரகசியங்களையும் அவிழ்த்தாத்தான் நம்மளால அடுத்து என்ன செய்யணுமோ அதை செய்ய முடியும்.''

– சந்தியா சரியான முடிவுக்குத்தான் வந்தாள். அதை ஆமோதிப்பது போல சீனிவாசனின் டேபிள் மேல் இருந்த பேனா யாராலோ தள்ளப்பட்டது போல கீழே விழுந்து உருண்டபடியே கண்ணன் காலடியில் வந்து நின்றது.

''சந்தியா... இந்த பேனா?''

''அப்பாவோட ஃபேவரைட் பேனா...''

''அப்ப இது இப்ப என் காலடிக்கு வந்துருக்குன்னா அப்பாதான் இதை எடுக்கச் சொல்றார். அவர் நம் எல்லா கேள்விக்கும் பதில் சொல்ல தயாரா இருக்கார் போல இருக்கு...''

''எனக்கும் அப்படித்தான் தோணுது - கமான் கண்ணன்...''

- சந்தியாவே குனிந்து பேனாவை அவன் வசம் தந்தாள்.

அவனும் அதை திறந்து எழுதத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு மேஜை முன் அமர்ந்து ஒரு பேட் நோட்டையும் திறந்து வைத்துக் கொண்டான்.

## 9

நடராஜன் அவரது சொத்தான குடும்ப நிலத்தில் கொத்தனார் மேஸ்திரியைக் கொண்டு ஜேஷ்டாதேவிக்கு கோயில் எழுப்ப தயாராகிவிட்ட விஷயம் ஊர் முழுக்க பரவியது. இந்த கோயில் கட்டும் முயற்சிக்கு குன்னக்குடி மலைச்சாமியாரும் ஒரு காரணம் என்கிற கருத்தும் சேர்ந்து கொண்டுவிட்டது. சிலருக்கு பயமாக இருந்தது. சிலருக்கு குழப்பமாக இருந்தது. ஜேஷ்டாதேவியை எங்குமே யாருமே வழிபடாதபோது நாம் மட்டும் வழிபடுவது சரி யில்லை என்றும் பேசத் தொடங்கினர். இறுதியாக ஊருக்குள் கோயில் கட்டக்கூடாது... வெளியே வேறு எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும் என்று முடிவு செய்து அதை ஊர் மிராசுதார் பொன்னம்பலம் மூலம் நடராஜனுக்கும் சொல்லி அனுப்பினர்.

மிராசு பொன்னம்பலம், நடராஜன் வீட்டுக்கே வந்து, ''வேண்டாம் நடராசா... சாமியார் சொன்னாருங்கறதுக் காக நீ களத்துல இறங்குறது சரியா படலை. அதுக்கு பேசாம அந்த சாமியார்கிட்டயே அந்த சாமியைக் கொடுத்து அவரை பூஜை பண்ணச் சொல்ல வேண்டி யதுதானே?'' என்றும் கேட்டார். விஷயம் சாமியார் காதுக்கும் போனது. அவரும் சிரித்துக் கொண்டே...



''பைத்தியக்காரங்களா. நான் எனக்குன்னு ஒரு பாதைல மாறாட்டம் இல்லாம போய்க்கிட்டிருக்கேன். நான் ஒரு சிவத்தொண்டன். அந்த சிவத்தை தவிர யாரையும் நான் வணங்கத் தேவையில்லை. என்னோட துறவறத்துல வேற எதுக்கும் இடம் இல்லை. அதனால நான் மத்த வழிபாட்டு முறைகளையோ, தெய்வங்களையோ குறை சொல்லலை. ஒரு காலேஜில பல பாடம் இருந்தாலும் ஒரு பாடத்தைதான் ஒருத்தன் எடுத்துப் படிக்க முடியும். அப்படித் தான் நானும். இதனால மத்த பாடங்கள் மட்டம்னு அர்த்த மில்லை. இங்க ஜேஷ்டாதேவிங்கறவளும் ஒரு பாடம். ஆனா, கஷ்டமான பாடம். இவ மட்டும் நாம சுத்தபத்தமா, தீட்டு இல்லாம இருந்தா மட்டும்தான் எதுவும் செய்ய மாட்டா. அப்படி எல்லாம் இருக்க முடியாதுன்னு நினைக் கிறதாலதான் எதிர்ப்பும் அதிகமா இருக்கு.

எப்ப கும்புடறதுக்கு ஆசைப்படாம பயப்பட ஆரம்பிச் சிட்டீங்களோ அப்பவே திரும்ப அதை புதைச்சுடறதுதான் சரி'' என்றவர், நடராஜனை கூப்பிட்டு, ''கோயில் வேண் டாம். புதைத்துவிடு'' என்று கூறிவிட்டார். எல்லோரும் பார்க்க, அப்படி கூறியவர் நடராஜனை தனியே அழைத்து காதில் ஏதோ கூறினார். நடராஜன் முகமும் அதன் பின் பெரிதாக மலர்ந்து சிரித்தது!

இந்த முறையும் சாமியாரின் சீடனான அருணாசலம் 'சாமி என்ன சொன்னார்?' என்று நடராஜனிடம் கேட்க, 'அது தெய்வ ரகசியம்... உங்களுக்கு தெரிஞ்சிக்கணும்னா சாமிகிட்டயே கேட்டுக்குங்க' என்று கூறிவிட்டார் நடராஜன்.

அருணாசலத்துக்கு அந்த பதில் எரிச்சலைதான் அளித்தது!

★

மேஜை முன் கண்ணன்.

கடிகார முள்ளின் வினாடி முள் சப்தம் மட்டும் கேட்கும் இரவுப் பொழுது. சந்தியா அவனையே பார்த்தாள். அவன் கையில் எழுதத் தயார் நிலையில் பேனா.

''கண்ணன்... இப்ப இந்த பேனாவை உன் மூலமா பயன்படுத்தி நம் கேள்விகளுக்கு அப்பா பதில் சொல் வாரா?''

''அப்படிதான் நினைக்கறேன் சந்தியா... இதெல் லாமே உனக்கும் சரி, எனக்கும் சரி புது அனுபவம்தானே?''

''நிச்சயமா... வெளிய சொன்னா யாரும் நம்ப மாட் டாங்க.''

''ஏன் சொல்லணும் சந்தியா... இது நம்ம அவஸ்தை. இது நமக்கான வழிகாட்டல்! எவ்வளவு பாசம் இருந்தா உன் அப்பா இறந்து ஆத்மாவாயிட்ட நிலையும் இப்படி வந்து வழிகாட்டுவார்னு யோசிச்சுப் பார்...'''

''உண்மைதான்... அப்பாவோட அன்புக்கு ஈடு இணை இந்த உலகத்துல எதுவுமே இல்லை...'' - சொல்லும் போதே பொங்கி வந்தது அழுகை. அந்த நொடி கண்ண னிடமும் ஒரு மாற்றம். அவன் உடம்புக்குள் யாரோ புகுந்து கொண்டுவிட்டது போல ஒரு சிலிர்ப்பு.

அவன் கைப் பேனா விறுவிறுவென்று எழுதத் தொடங்கியது.

'என் அன்புள்ள சந்தியா... கண்ணன்!

**என் வருகையைப் புரிந்துகொண்டு பயப்படாமல் பேனாவை எடுத்துக் கொண்டு அமர்ந்ததற்காக முதலில் உங்களைப் பாராட்டுகிறேன்... இறப்புக்கு பிறகு ஒரு மனித உயிர் என்னாகிறது என்ற கேள்வி எனக்கு உண்டு. அதற்கு**



**பல பதில்களை நான் படித்திருக்கிறேன். தெள்ளத் தெளி வாக ஒரு பதிலை ஒருவர்கூட சொன்னதில்லை. அப்படியே சொல்லியிருந்தாலும் அதுதான் சரி என்பதை இறந்து பார்த்த பிறகுதானே ஒருவரால் உணர முடியும்?**

**என் அருமைச் செல்வங்களே...**

**அப்போதெல்லாம் நான் மனதுக்குள் ஆழமான ஒரு முடிவுக்கும் வந்திருக்கிறேன், நாமாவது அந்த விடையைக் கண்டுபிடித்து இந்த உலகுக்கும் சொல்லிவிட வேண்டும் என்று... ஒரு எதிர்பாராத விபத்தால் இன்று நானும் அலை கின்ற ஆத்மாவாக ஆகிவிட்ட நிலையில் எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உடம்பில்லாத நிலையில் எண்ணங்களை அலைவரிசை தொகுப்பாக வைத்துக் கொண்டு அதிலிருந்து பேசுவதும் எழுதுவதும் எனக்கே புது அனுபவம்.**

**நான் இருக்கிறேனா இல்லையா என்பதிலேயே என் எண்ணங்களில் ஒரு குழப்பம் நிலவுகிறது. மிதப்பது போல வும் இருக்கிறது. பறப்பது போலவும் இருக்கிறது. இப்படி சொல்வதெல்லாம்கூட தவறுதான். என் நிலையை சொல்ல எந்த மொழியிலும் வார்த்தைகள் இல்லை. நான் வார்த்தைப் படுத்துவதெல்லாம்கூட தவறனாவையே...**

**இதனால்தான் சித்தர் பெருமக்கள் 'கண்டவர் விண் டிலர், விண்டவர் கண்டிலர்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது, பார்த்தவன் சொல்வதில்லை. சொல்பவன் பார்க்க வில்லை என்பது அதன் பொருள்.**

**இப்போது என் ஆத்மாவின் நிலை பற்றிய விளக் கங்கள் பெரிது இல்லை. நடந்து முடிந்த விபத்து என்னும் கொலை பற்றியும் அதற்கான காரணங்களையும் முதலில் கூறிவிடுகிறேன்.**

என் குடும்ப சொத்தான மூன்று ஏக்கர் இடம்தான் எல்லாவற்றுக்கும் ஆரம்பம்... அந்த இடம் சாதாரணமான இடம் அல்ல, அதனுள் நம் குடும்பச் சொத்தான ஒரு சாமி சிலை புதைந்துள்ளது. அது சாதாரண சிலை அல்ல! நவபாஷாணங்களால் செய்யப்பட்ட ஜேஷ்டாதேவி சிலை அது. அதற்கு ரசாயன குணம் உண்டு. அதை முறைப்படி கர்ப்பக் கிரகத்தில் வைத்து பூஜை செய்து வந்தால் எல்லா நல்லதும் நடக்கும். இல்லாவிட்டால் எதிர்விளைவுகள் ஏற்படும். ஜேஷ்டாதேவி என்பவள் தூர இருந்து காப்பாற்றுபவள். லட்சுமிதேவி உடன் இருந்து காப்பாற்றுபவள். அவளை முறையாக வழிபட வேண்டும். அதில் ஒரு சிறு பிழை வந்தாலும் ஆபத்துதான். அப்படிதான் ஜேஷ்டாதேவி சிலையை என் அப்பாவான நடராஜன் கண்டெடுத்த போதும் நடந்தது. ஊரே வறண்டு போய் சில காலமும், வெள்ளக்காடாய் சில காலமும் இருந்தது. ஜேஷ்டாதேவி சிலை ஒரு ஊரில் எங்கே எப்படி பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பது முதல் ஆகம சாஸ்திரத்தில் சொல்லப் பட்டுள்ளது. எட்டு திசைகளில் கன்னி மூலை எனப்படும் தென்மெற்கு மூலையில் அவள் கோயில் கொள்ளும்போது ஊரே நல்ல மழை வளத்தால் செழிக்கும். அதுவே ஈசான்யத் தில் அமைந்தால் ஊரே வறண்டு போகும். அன்றும் இதனால் பிரச்னை வந்தது. இந்த ஜேஷ்டாதேவி சிலை எப்படி இந்த விசாலபுரத்துக்குள் நம் வீட்டுக்குள் வந்தது என்பது தெரியாது. அதை தெரிந்துகொள்ள ஆசைப்பட் டால் பல தலைமுறைகளை கடந்து போக வேண்டியிருக் கலாம். என் அப்பாவும் அந்த ஆராய்ச்சியில் இறங்காமல் சிலையை வைத்து கும்பிடத்தான் விரும்பினார். ஆனால், பயந்து போன ஊரின் எதிர்ப்பால் அதை அந்த மூன்று ஏக்கர் நிலத்தில் கன்னி மூலையில் புதைத்துவிட்டார்.



அந்த நிலத்துக்குள்ளே தெய்வம் இருப்பதால் அங்கே யாரும் போய் எச்சில் உமிழவோ, சிறுநீர் கழிக்கவோ கூடாது. அது ஜேஷ்டாதேவிக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தும் என்பதால்தான் அங்கே எந்த தோட்டமும் போடவில்லை. தோட்டம் போடும்போது அதில் வேலை செய்பவர்கள் அசுத்தம் செய்யலாம் அல்லவா?

எனவேதான் அதை வேலி போட்டு காபந்து செய்து வந்தோம். அந்த நிலத்துக்குள் ஜேஷ்டாதேவி சிலை புதைக் கப்பட்ட விஷயம் 60 வருடத்துக்கு முன்பிருந்த என் அப்பாவின் வயதுள்ள சிலருக்கு மட்டும் தெரியும். அதன் பின் குன்னக்குடி கோயிலில் தவம் செய்யும் சாமியாருக்கு தெரியும். ஆனால், யாருக்கும் அது நவபாஷாண விக்கிரகம் என்றோ அதற்கு ரசாயன குணங்கள் இருப்பதோ தெரி யாது. அதுதான் அந்த சிலை வெளியே இருக்கும் காற்றில் கலந்து வினைச் செயல் புரிந்து மழை, வெயில் மற்றும் ஊருக்குள் பரவிடும் பலவித நோய்களுக்கும் காரண மாகிறது. அதுதான் ஊரில் எல்லாரும் செல்வ வளத்தோடு நோயின்றி சந்தோஷமாக வாழவும் காரணமாகின்றது.

மின் டிரான்ஸ்ஃபார்மரை எச்சரிக்கையாக கையாள்வது போல கையாள வேண்டும். ஆனால், கையாளத் தெரியாத பயம்தான் அந்த தேவி சிலையைப் புதைந்து போகச் செய்து விட்டது. இந்த உண்மையை மிக தாமதமாக சாமியாரின் டைரியைப் படித்து தெரிந்துகொண்ட அவரது சிஷ்யரான அருணாசலம்தான் நான் இன்று கொலையாகி ஆவியாக அலைவதற்கு காரணம். இவர்தான் தொண்டிமுத்துவை ஏவிவிட்டு இடத்தை வாங்க முயற்சி செய்கிறார். இன்று நவபாஷாண சிலையின் மதிப்பு பல நூறு கோடிகள்! அவ்வளவு மதிப்புள்ள, வணங்கவேண்டிய சிலையைப் புதைத்தே வைத்திருப்பதால் அதற்கு காரணமாக நம் குடும்பமும் கஷ்டமே பட்டுள்ளது. என் அப்பா அம்மாவும்

நல்லவிதமாய் சாகவில்லை. அப்பாவை வயலில் பாம்பு கடித்தது. அம்மாவை தெருநாய் கடித்தது. என்னை ஒரு மனித மிருகம் கொன்றே விட்டது. இனியும் அந்த தவறு நிகழக்கூடாது.

கண்ணா.... நீ என் சகோதரி மகன். சந்தியாவுக்கு முறை உள்ளவன். என் மகளை நீ திருமணம் செய்துகொள். இதனால் பிரிந்த குடும்பம் ஒன்றுசேரட்டும். நீங்கள் இருவரும் சேர்ந்து இன்று அந்த நிலத்தில் உள்ள சிலையை தோண்டி எடுத்து ஊரில் உள்ள சிவன் கோயில் கிணற்றில் போட்டுவிடவும். இதனால் கோயில் தீர்த்தம் மருந்தாகும். கோயில் தீர்த்தமும் அபிஷேகத்துக்கு மட்டுமே பயன் படுவதால் சிலையும் நித்ய அபிஷேகத்தில் இருக்கும். உங்களால் வெளிப்படையாக அதை வைத்து வழிபாடு செய்ய முடியாது. பேராசை உள்ளவர்கள் சிலையை அபகரிக்க வந்து அதனால் தீயவிளைவுகள் ஏற்படும். எனவே, சிலை கோயில் கிணற்றில் இருப்பதே நல்லது. இன்று இரவே எப்பாடுபட்டாவது அதை செய்துவிடுங்கள்.

கோயிலுக்குள் நீங்கள் நுழைய தோதாக அதன் கதவுகள் திறந்திருக்கும். காவலாளியை எழுப்பி கதவை திறக்க வைப்பது என் பொறுப்பு.

இந்த கடமையை நல்லவிதமாக முடித்து எதையும் காட்டிக் கொள்ளாமல் இடத்தையும் அந்த தொண்டிமுத்துவுக்கு விற்றுவிடுங்கள். அவனையும் அவனுக்கு துணை போன சாமியார், அழகப்பன், லட்சுமணன் என்னும் நான்கு பேரையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.

ஆஸ்பத்திரியில் இருக்கும் உன் தாயும் விரைவில் குணமடைவாள். என் ஆத்ம சக்தியால் நான் பர உலகை அடையும் வரை உங்களுக்கு துணையாக இருந்து வழி காட்டுவேன். கவலை வேண்டாம். ஆசிகள்.

அன்புள்ள அப்பா,
**சீனிவாசன்.'**



- பேச வேண்டிய அவ்வளவையும் எழுதி முடித்த நிலையில் கண்ணன் கை சட்டென்று நின்றுபோனது. அவனும் மேஜை மேல் மரம் போல் விழுந்தான். எல்லாம் சில வினாடிகள்தான். பின் நிமிர்ந்தவன், எழுதியதை படித்தான். கண்ணீருக்கு நடுவில் சந்தியாவும் படித்தாள். படித்துவிட்டு விசும்பி அழுதாள். கண்ணன் கண்ணீரை துடைத்துவிட்டான்.

''சந்தியா! கெட்டதுலயும் ஒரு நல்லதா உன் அப்பா நம்ம கூட இந்த கடிதம் மூலமா பேசியிருக்கார். இது எவ்வளவு பெரிய விஷயம்? யாருக்கு கிடைக்கும் இப்படி ஒரு வாய்ப்பு? மனசை தேத்திக்கோ. புறப்படு... உன் அப்பா சொன்னபடி அந்த சிலையைத் தூக்கி முதல்ல கிணத்துல போடுவோம். இந்த கொலைக்கு காரணமான அந்த தொண்டிமுத்துகிட்டயே இடத்தை வித்து பணத்தையும் வாங்குவோம். அது அந்த ஆள் கட்டப்போற அபராதம். மத்தபடி உன் அப்பா அந்த நபரை எப்படித் தண்டிக்கணுமோ அப்படித் தண்டிப்பார்...'' என்றான் கண்ணன்.

சந்தியாவும் மனதை தேற்றிக் கொண்டு தயாரானாள்.

## 10

ஒரு பௌர்ணமி இரவில் தன் நிலத்திலேயே குழியைத் தோண்டி சிலையைப் புதைத்த நடராஜன். அப்போதே புதைத்த நிலத்தை சுற்றி முள்வேலியைப் போட்டுவிட்டார். ஒருவழியாக பிரச்னை அடங்கிப்போனது. சிலர் சில காலம் பேசினார்கள். அப்புறம் அந்த பேச்சுக்கே இடம் இல்லை. துஷ்ட சக்தியாக கருதியதால் அந்த இடத்துப்

பக்கம் ஆடு மாடுகளைகூட மேய்ச்சலுக்காக யாரும் விடாத படி பார்த்துக் கொண்டனர்.

ஆனாலும் நடராஜனுக்கு தான் ஒரு கோழை போல நடந்து கொவடுவிட்டதாகத்தான் தோன்றியது. விசாலாட்சியும் கும்புட வேண்டிய சாமியை இப்படி பொணம் மாதிரி புதைச்சுட்டோமே என்று குமைந்தாள்.

நடராஜன் தன் உளைச்சலை எல்லாம் ஒரு டைரியில் எழுதி வைக்க தவறவில்லை. ஒரு நாள் வயல் வரப்பில் நடந்து வருகையில் பாம்பு கடித்து அங்கேயே நுரை கக்கி உயிரை விட்டார். சில மாதங்களிலேயே விசாலாட்சியை தெருநாய் ஒன்று வெறிபிடித்த நிலையில் கடித்து விட்டது. அதனால் ரேபிஸ் நோய் வந்து நாய் போல குரைத்துக் குரைத்தே செத்துப்போனாள் விசாலம். ஊரில் உள்ளவர்கள் அதற்கும் சிலைதான் காரணம் என்று பேசிக்கொண்டனர்.

அது ஒரு நவபாஷாண சிலை என்கிற உண்மை குன்னக்குடி மலைச்சாமியாருக்கும், செத்துப்போன நடராஜனுக்கும் தவிர யாருக்குமே தெரியாது. பின்னாளில் அப்பாவின் டைரியைப் பார்த்து சீனிவாசன் தெரிந்து கொண்டார். இங்கே சீனிவாசன் தெரிந்து கொண்டது போலவே அங்கே சாமியார் முக்தி அடையவும், பொறுப்புக்கு வந்த சீடன் அருணாசலமும் சாமியார் டைரியைப் பார்த்து ஊரில் நிலத்துக்குள் புதைந்து கிடப்பது விலை மதிப்பில்லாத நவபாஷாணம் என்பதை தெரிந்து கொண்டார்.

அதைக் கொண்டு சாகசங்கள் செய்வதும், ஒரு ஊரையே அழிப்பதும் அதைப் பயன்படுத்தும் விதத்தை பொறுத்து என்பது தெரிய வரவும், அதை அடைய முயற்சி செய்தார். அந்த முயற்சியை நேராக செய்யாமல் தொண்டி முத்து மூலமாக செய்ததுதான் விபத்து என்கிற பெயரில் கொலை வரை போய்விட்டது.

★



இரவு மணி 12.

வீட்டுக் கடிகாரத்தின் பெண்டுலத்தின் சப்தம் துல்லியமாக கேட்டு அடங்கியது. சந்தியா கதவை திறந்து கொண்டு வெளியில் வந்து பார்த்தாள். அழுதுவடிந்தபடி தெருவிளக்குதான் எரிந்து கொண்டிருக்கும். அன்று அது கூட அணைந்திருந்தது.

இரவுக்கே உரிய சில் வண்டுகளின் சப்தம்.

இருவரும் கைவசம் ஒரு டார்ச்லைட் மற்றும் கடப்பாரை, மண்வெட்டி சகிதம் தெருவில் இறங்கினர். சில அடி தூரம் வரை நடந்த கண்ணன் திரும்பிவிட்டு வாசலை பார்த்தான். புரொபசர் சீனிவாசன் பயன்படுத்திய மொபெட் வாகனம் நின்றுகொண்டிருந்தது.

சந்தியாவும் புரிந்துகொண்டு கேட்டாள்.

“என்ன கண்ணன்... வண்டில போகலாமா?”

“ஆமாம் சந்தியா... அந்த சிலையை நம்ம இரண்டு பேரால தூக்கிட்டு நடக்க முடியுமோ முடியாதோ?”

“அப்ப சரி, வண்டியை எடுங்க” என்றவள், உள்ளே போய் சாவியை எடுத்து வந்து தந்தாள்.

கண்ணன் மிக விவேகமாய் வண்டியை ஸ்டார்ட் செய்யாமல் தள்ளிக் கொண்டு தெருவில் நடந்தான். சிறிது தூரம் சென்றபின்தான் ஸ்டார்ட் செய்தான்.

சந்தியாவும் பின்னால் தொற்றிக் கொண்டாள்.

அவளது ஒரு கையில் மண்வெட்டி இருந்தது.

யாராவது பார்த்தால் விபரீதமாகத்தான் நினைப்பார்கள். இருந்தாலும் அப்பாவின் ஆத்மா நிச்சயம் உடன் துணை வரும் என்ற நம்பிக்கை வழி நடத்தியது. ஒரு இடத்தில் தெருநாய் ஒன்று இருந்து பெரிதாய் குரைக்க ஆரம்பித்தது. அதனால் தெருவே விழித்துக் கொண்டுவிடுமோ என்றுகூட சந்தியாவுக்கு பயம் வந்துவிட்டது. திடீரென்று

அந்த தெருநாய் எதிர் திசையில் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தது.

''என்ன கண்ணன் இது... கத்துன நாய் எதிர் திசை ஓடுது.''

''அதை உன் அப்பா நமக்கு தொந்தரவு இல்லாதபடி இழுத்துக்கிட்டுப் போறார் சந்தியா...''

''அப்படின்னா நம்ம கூடவே அப்பா வந்தாரா?''

''நாய்களுக்கு ஆவிகளைப் பார்க்கற ஆற்றல் உண்டுன்னு படிச்சதில்லையா?''

- கண்ணனின் விளக்கம் தெருவென்றும் பாராமல் சந்தியாவை திரும்பவும் அழவிட்டது.

''சந்தியா! இது உணர்ச்சிவசப்பட வேண்டிய நேரமில்ல... அப்பா சொன்ன ரகசியத்தை செயல்படுத்த வேண்டிய நேரம். கமான்...'' என்று அவளைத் தேற்றி அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவர்களின் அந்த மூன்று ஏக்கர் இடம் அந்த இரவின் பிடியில் கறுப்பாய் மைபூசிக் கொண்டது போல கிடந்தது. அவ்வளவு பெரிய இடத்தில் எங்கே அந்த சிலை புதைந்திருக்கிறது என்று கண்டுபிடிப்பது?

கண்ணன் வேலித்தடுப்புக்கு முன்னால் மொபெட்டை நிறுத்திவிட்டு தீவிரமாக யோசித்தபோது வானில் மழை வருவதற்கான அறிகுறிகள் !

மின்னல் ஒன்று டிராகன் உடம்பு போல நெளிசல் எடுத்து வானில் ஓடியது. கீழே அதன் வெளிச்சத்தில் பளிச்சென்று இடமும் தெரிந்தது.

அதில் எந்த இடம்?

சந்தியாவுக்கும் குழப்பமாக இருந்தது.

''கண்ணன்... இதுல அந்த இடம் எதுன்னு தெரியல தானே?''



''ஆமாம் சந்தியா... ஆனாலும் இவ்வளவு தூரம் வழிகாட்டுன உங்கப்பா இங்கதானா வழிகாட்ட மாட்டார்?'' - கண்ணன் நம்பிக்கையோடு சொன்னது வீண்போகவில்லை.

தெருவில் வந்தபோது எதிர்திசையில் குரைத்துக் கொண்டே ஓடிய நாய் அங்கேயும் குரைத்தபடி வந்தது. இருவருக்கும் அதிர்ச்சி. சிலமுறை மட்டுமே குரைத்த அந்த நாய் வேலியைத் தாண்டிக் குதித்து நிலத்துக்குள் ஓடியது. மின்னல் ஒளியில் அது நன்றாக தெரிந்தது.

''சந்தியா! நாயை நாம பின்தொடர்வோம்... என்று டார்ச்லைட்டையும் தட்டிவிட்டபடி பின்தொடர்ந்தான். வேலிக்குள் குனிந்து உள் நுழையப் பார்த்த சந்தியாவின் துப்பட்டா வேலிக்கம்பியில் சிக்கிக் கொண்டுவிட, இருட்டில் அவள் அதை எடுத்துவிட சிரமப்பட்டபோது யாரோ வந்து எடுத்துவிட்டு உதவியது போல அந்த துப்பட்டா விடுபட்டது.

''அப்பா...'' என்று அங்கேயே விசும்பத் தொடங்கி விட்டாள். கண்ணன் திரும்பிப் பார்த்து டார்ச்லைட்டை அடித்தான். அதை வைத்து அவனை நோக்கி ஓடினாள். நாயும் முன் சென்ற நிலையில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் காலால் பறித்தபடி இருந்தது.

''சந்தியா... அந்த இடம்தான்.. பார், நாயே தோண்டிக் காட்டறத...''

- சந்தியா கையில் டார்ச்லைட்டை கொடுத்துவிட்டு அங்கே போய் தோண்டத் தொடங்கினான். மளமளவென்று குழி உருவாகி மண் திப்பிகள் வெளியேறின.

கிட்டத்தட்ட ஐந்தடி ஆழத்துக்கு குழி தோண்டியும் கண்ணனிடம் பெரிதாய் களைப்பில்லை. நாயும் ஆவலாக பார்த்தபடியே நின்றது. சந்தியா அதையே தன் அப்பாவாக நினைத்து மண்டியிட்டு அமர்ந்து வருடித் தந்தாள். அதற்கும் இதமாய் இருந்தது.

ஒரு கட்டத்தில் டண் என்று மண்வெட்டி கல் மேல் படும் சப்தம் கேட்டது. சிலை தட்டுப்பட்டுவிட்டது. கண்ணன் டார்ச்லைட் வெளிச்சத்தை உட்பக்கமாய் அடித்து சிலையை சந்தியாவோடு சேர்ந்து பார்த்தான். பின் வெயிட் லிஃப்ட் வீரனைப் போல தன்னைப் பாவித்துக் கொண்டு அந்த சிலையையும் தூக்கி வெளியே வைத்தான்.

அடுத்த நொடி சிலுசிலுவென்று மழை நீர் பொட்டுக்கள் சிந்தத் தொடங்கின. பின் ஓங்கலாகவே பெய்த மழை சிலையை அபிஷேகித்தது. அதிலேயே மண் திப்பிகள் கரைந்து உருவம் பரிபூர்ணமாக தெரிந்தது. சந்தியா பக்தியோடு கைகூப்பி வணங்கினாள்.

கண்ணன் ஒரே தம்மில் அதை தூக்கி தோள் மேல் வைத்தான். கிட்டத்தட்ட அறுபது எழுபது கிலோ எடை இருக்கலாம். பாரம் அமுக்க நடந்தான். வேலிக்கம்பிகள் வெளியில் வந்து மொபெட் ஸீட்டின் பின்புறம் சிலையை வைத்தான். மழை பெரிதாய் பெய்ய ஆரம்பித்துவிட்டது.

அதுவும் நல்லதற்குதான்.

தெருவில் நடமாட்டமே துப்புரவாக இருக்காது. காற்றுக்காக வாசலில் படுத்திருப்பவர்கள்கூட எழுந்து உள்ளே சென்றுவிடுவார்கள்.

நிலத்திலும் மழை நீர் தோண்டிப் போட்ட மண்ணை கரைத்து குழியை மூடிக்கொண்டிருந்தது!

மொபெட் மேல் இருந்த சிலையை சந்தியா பிடித்துக் கொள்ள, கண்ணன் வண்டியைத் தள்ளத் தொடங்கினான்.

நாய் முன்னால் ஓடியது.

துளியும் குழப்பமோ பயமோ இன்றி கண்ணன் நடந்தான். அந்த சிலையும் அந்த இரவில் ஊரைப் பார்த்தபடியே அவர்களைத் தொடந்தது!

★



சிவன் கோயில்!

திரண்டுவந்த மழை காவலாளியை எழுப்பி கோபுர வாசல் கதவை திறந்துகொண்டு உள்ளே மண்டபத்துக்குள் செல்ல வைத்தது. மின்சாரம் வேறு இதுதான் சாக்கு என்று கட் ஆகிவிட, காவலாளி மழை நிற்கும் வரை பொறுத்திருப்போம் என்று மண்டபத்துக்குள் போர்வையால் உடம்பை மூடிக் கொண்டுவிட்டான்.

மொபெட்டில் கோபுர வாசல் வரை வந்துவிட்ட கண்ணனுக்கும் சந்தியாவுக்கும் கோபுர வாசல் கதவு திறந்திருப்பது ஒரு புது தெம்பை தந்தது. அப்படியே மொபெட்டோடு உள்ளே நுழைந்தனர்.

பளீரென்று ஒரு மின்னல்!

கிணறு இருக்கும் திசையை வினாடியில் காட்டி முடித்தது. கண்ணனும் மொபெட்டுடன் அந்த பக்கமாய் திரும்பினான். கிணற்றையும் நெருங்கினான். சிலையை சிரமப்பட்டு திரும்ப தோளுக்கு தூக்கினான். அப்போது வானில் ஒரு பெரிய இடி சப்தம். அது அவனுக்குள்ளும் அதிர்வை பாய்ச்ச, சிலை பொத்தென்று கிணற்றுக்குள் விழுந்து எழுந்து சப்தம் இடி சப்தத்தில் அமுங்கிப் போனது.

எல்லாமே திட்டமிடப்பட்டதுபோல நடந்து முடிந்தது தான் ஆச்சரியம். அதற்கு மேல் அங்கே நிற்காதபடி மொபெட்டில் மெல்ல வெளியில் வந்து பின் அதை ஓட்டிக் கொண்டு வீட்டு வாசலுக்கு வரவும், மின்சாரம் வரவும் சரியாக இருந்தது. மழையும் குறையத் தொடங்கிவிட்டிருந்தது.

மொபெட்டை அதற்குரிய இடத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்ற இருவரும் ஈரம் சொட்டச் சொட்ட சீனிவாசன் படத்தின் முன் நின்றனர்.

நடந்தது - நடந்து முடிந்தது எல்லாமே ஒரு கனவு போலதான் இருந்தது. எங்கேயோ இருந்த கண்ணன் நடு

இரவில் வந்து சந்தியாவின் வாழ்க்கைக்கே ஆதாரமாகவும் ஆகிவிட்டான். அவளுக்கும் ஒரு துணை தேவை என்பதை உணர்ந்து இறந்துவிட்ட பின்பும் தன் கடமையைச் செய்த சீனிவாசன் ஆத்ம சக்தியை என்னவென்று சொல்வது?''

★

**வெள்ளிக்கிழமை!**

தொண்டிமுத்துவின் கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. கண்ணனும், சந்தியாவும் சீனிவாசன் படத்தை வணங்கிவிட்டுப் புறப்பட்டனர்.

காரும் ரெஜிஸ்திரர் ஆபீஸ் நோக்கி சென்றது.

வழியில் அழகப்பன், லட்சுமணன் இருவரையும் சாட்சி கையெழுத்துப் போட ஏற்றிக் கொண்டனர்.

லட்சுமணன், கண்ணனை ஒரு அதிசயப் பிறவியைப் போல பார்த்தார்.

''உங்கம்மாதானே வீட்டை விட்டு ஓடிப்போனவ?'' என்று தனக்கே உரிய பாணியில் கேட்டார்.

''உயிரோட இருந்த வரை உன்னால ஒட்ட முடியலை. சீனிவாசன் மண்டைய போடவும், சந்தியாவை வந்து பிடிச்சுட்டியாக்கும்?'' என்று அழகப்பனும் வார்த்தைகளில் வறுத்தெடுத்தார். இருவரும் எதுவுமே பேசவில்லை.

காருக்கு முன்னால் இரவில் வழிகாட்டிய அதே நாய்...

அந்த நாயையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் கண்ணன்.

ரெஜிஸ்திரர் ஆபீஸினுள் முதலில் அந்த நாய் நுழைய, பின்னாலேயே கார் நுழைந்தது. உள்ளே தொண்டிமுத்து தயாராக இருந்தார். ஒரு ஆச்சரியம்போல அருணாசல சாமியும் வந்திருந்தார்.

சந்தியாவிடம் போலியாக, ''உங்கப்பாக்கு இப்படி



ஒரு கதியான்னு நினைச்சு துடிச்சுப் போயிட்டேம்மா...'' என்றார்.

பத்திரங்கள் தயாராக இருந்தன.

தொண்டிமுத்துவின் பணம் அந்த ஆபீஸில் ஈ எறும்புகூட வேலை வாங்கிக் கொண்டிருந்தது.

கண்ணனும் சந்தியாவும் மௌனமாகவே இருந்தனர்.

கையெழுத்து போடும் நேரம் வந்தது.

போட்டனர்.அ

தங்கள் வசம் உள்ள மூலப் பத்திரங் களையும் ஒப்படைத்தனர், தொண்டிமுத்துவும் பாக்கித் தொகையை ஒரு தோல் பையில் போட்டுக் கொடுத்தார்.

பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு தோல் பையை அவரிடமே திருப்பித் தந்தனர்.

பின்னர் புறப்பட்டனர்.

''கார்லயே ட்ராப் பண்றேன்...'' என்று சொன்னவரை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

வெளியே ஆட்டோ காத்திருக்க, அதில் ஏறிக் கொண்டனர். நாய் மட்டும் வரவில்லை.

சந்தியா திரும்பித் திரும்பி பார்த்தாள்.

''கண்ணன்! அந்த நாய்...'' என்றாள்.

''நாய் இல்ல அது... உனக்கு அப்பா, எனக்கு மாமா! நம்ம வேலை முடிஞ்சிடிச்சு. அவர் வேலையை அவர் முடிக்க வேண்டாமா?'' என்றான்.

''நீ என்ன சொல்றேன்னு பாதி புரியுது. மீதி புரியலை...''

''அது போகப் போகத்தானே எல்லாருக்குமே புரியப் போகுது.'' - சொல்லிவிட்டு கண்களைச் சிமிட்டியவன்,

''நேரா ஆஸ்பத்திரிக்கு போய் அம்மாவைப் பார்க்கறோம்'' என்றான்.

ஆஸ்பத்திரி!

உள்ளே நுழையும்போதே ஆச்சரியம் காத்திருந்தது.

''உங்கம்மா கண் திறந்து பார்த்தாங்க... அனேகமா 15 நாளைல பேசிடுவாங்க...'' என்றாள் நர்ஸ் ஒருத்தி.

அப்போது சந்தியாவின் செல்லுக்கு அழைப்பு வந்தது.

காதை கொடுத்தவள் அப்படியே விக்கித்தாள்.

''என்ன சந்தியா?''

''நீ சொன்ன மாதிரியே ஆயிடிச்சு.''

'விவரமா சொல்லு...''

''அந்த தொண்டிமுத்து ரெஜிஸ்திரேஷன் முடிஞ்சு தன் கார்ல திரும்பிப் போகும்போது நாய் குறுக்க வரவும், டிரைவர் காரை ஒடிச்சி திருப்பினதுல எதிர்ல வந்த லாரி மேல மோதி...'' - அதற்கு மேல் சந்தியா சொல்லவில்லை. கண்ணனே புரிந்துகொண்டான்.

அவன் புரிந்துகொண்டது அந்த ஆக்ஸிடெண்ட் எப்படி ஆகி யாரெல்லாம் இறந்திருப்பார்கள் என்பது மட்டு மல்ல, ஆத்மபலம் உள்ள சீனிவாசன் என்னும் அழகிய அப்பாவின் ஆத்ம சக்தியையும்தான்!

சந்தியா சிலிர்ப்போடு அவன் மேல் சாய்ந்துவிட் டிருந்தாள்!